கழக வெளியீடு : ௭௪௬

# அமைதி

MADURAI UNIVERSITY LIBRARY
5 JAN 1973
MADURAI-2.

ஆசிரியர் :

திரு. சு. அன்புமலர் பி. ஏ., (ஆனர்ஸ்.)

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

**First Edition :** Nov., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1025

# பதிப்புரை

நம் தமிழ் இலக்கியங்களின் பெரும்பகுதியும் மனித ஒழுக்க முறைகளை எடுத்துரைப்பதாகவே அமைந்துள்ளன. உலக இலக்கியங்கள் அனைத்தையும் எடுத்துப் பார்த்தாலும் ஒப்புமை கூறமுடியாத திருக்குறள் முழுக்க முழுக்க ஒழுக்க நூலேயாகும். எனினும், உரைநடைப் பகுதியில் மன ஒழுக்க முறைகளை, எவ்வாறு கற்றுணர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்பதை விளக்குதற்குப் போதிய நூல்களில்லா திருந்தன.

மேல்நாட்டு அறிஞருள் ஒருவரான திரு. ஜேம்ஸ் ஆலன் அவர்களுடைய நூற்கள் முழுவதுமே இவ்விதமான மனித உள்ளத்தின் ஒழுக்கமுறைகளைப் பற்றியவையாகும். எனவே, நம் நாட்டிற்கேற்ப அவர் நூற்கருத்துக்களை வெளியிட வேண்டுமென்பது எம் பேரவா. அம்முயற்சியின் முதல் வெளியீடே 'அமைதி' என்னும் இந்நூல். இது ஜேம்ஸ் ஆலன் அவர்களுடைய நூலைப் (From Passion to Peace) பெரிதும் தழுவியதாகும்.

இந்நூலைச் செவ்விய முறையில் எளிய இனிய நடையில் திரு. சு. அன்புமலர், பி. ஏ., (ஆனர்ஸ்) அவர்கள் ஆக்கித் தந்துள்ளார்கள். தமிழகம் இதனை ஏற்றுப் பயனெய்து மென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

MADURAI UNIVERSITY LIBRARY,
MADURAI-2.

## உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| க. | பற்று (Passion) | 1 |
| உ. | உயர்வுநாட்டம் (Aspiration) | 11 |
| ௩. | அவாவெழுச்சி (Temptation) | 23 |
| ச. | மாறுகை (Transmutation) | 32 |
| ௫. | மீ உயர்வு (Transcendence) | 43 |
| ௬. | பேரின்பம் (Beatitude) | 55 |
| எ. | அமைதி (Peace) | 63 |

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

# க. பற்று

> "பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
> பற்றி விடாஅ தவர்க்கு" (குறள்: ௩௪௭)

பற்றினைப் பற்றி விடாத நிலையே கீழ்த்தரமான மனித வாழ்வாகும். இதனினின்றும் தாழ்வுறுதல் எவருக்கும் இயலாது. திங்கள் ஒளி படாதவிடத்து இருள் சூழ்வதோடு, அங்குள்ள சேறுகளில் புழுக்கள் நெளிந்தூர்வது இயல்பு. இதை யொத்து இணைவிழைச்சு, பகை, பொருளாசை, செருக்கு, இறுமாப்பு, பேராசை, பழிவாங்கல், அழுக்காறு, வன்மம், கோளுரைத்தல், புறங்கூறல், பொய்ம்மை, களவு, சூது, வஞ்சகம், கொடுமை, அயிர்ப்பு ஆகிய இவையனைத்தும் பற்றென்னும் கீழுலகில் குடியேறுகிற அறிவற்றதும், அறிவிற் கொவ்வாததுமான விலங்குத் தன்மைகளாகும். மனித உள்ளமெனும் விலங்கினக் காடுகளில் இவை வதிகின்றன.

கழிந்த தெண்ணிக் கலங்குதல், இன்னல் வறுமை எனும் இருள் சாயல்களும், துன்பம், அல்லல், அரற்றல் எனும் சோர்வுத் தோற்றங்களும் உறையுமிடம் இதுவே.

தூய்மையின் அமைதியை அல்லது இறையொளியை யுணராது அறிவற்றவர்கள் இவ்விரு

னுலகின்கண் வாழ்ந்து மடிகின்றனர். அத்தெய்வ ஒளி, மேலுறைந்து அவர்களுக்காக மிளிர்ந்து கொண்டே யிருக்கிறது. மண்ணின்பத்தில் - உடலின்பத்திலேயே நோக்கமைந்த தெளிவில்லாக் கண்கள்மீது படரும் வரை இவ்வொளி மிளிர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆனால், அறிவுள்ளவர்கள் மேல்நோக்குகின்றனர். இப்பற்றுலகத்தோடு அவர்கள் அமைதி பெறுவதில்லை. அமைதியெனும் உயர்ந்த உலகத்தையடையும் படியேற முற்படுகின்றனர். தாம்-கருத்திற்கொண்ட அவ்வுலகின் ஒளியும் சிறப்பும் நெடுந்தொலைவில் உள்ளதாமெனக் கருதுகின்ற அவர்கள் விரைவில் அது அண்மையிலுள்ளதென்பதையும், பேரின்பம் பெருக்கும் பெற்றியுடைத்து என்பதையும் உணர்கின்றனர்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்." (குறள்: ௩௭0)

நிரம்பாத இயல்புடைய அவாவை ஒருவன் நீக்குவானாயின், அப்போதே அது அவனுக்கு அழியாத தன்மையைக் கொடுக்கும் என்று வள்ளுவரும் கூறினர்.

பற்றால் கட்டுண்ட வாழ்வினின்றும் எவருந் தாழ்வுற முடியாது. ஆனால், எல்லோரும் உயர்வெய்தலாம். பின்னும் தாழ்வடைதல் இயலாத நிலையிலுள்ள அத் தாழ்விடத்தினின்றும் பெயருகிற ஒருவர், முன்னேறியே ஆகவேண்டும். அம் முன்னேற்றப்பாதை எப்பொழுதும் கையிலேயுளது;

அண்மையில் எளிதாய்ப்பெறும் நிலையிலுள்ளது. தன்னடக்கத்தின் வழி இதுதான். தன்னலத்திற்கு என்னுள்ளத்தில் இடமில்லையெனக் கூறத் தொடங்குகிற ஒருவன் தன்னுள்ளத் தாறுமாறான எண்ணச் சிதறல்களை அடக்கியாண்டு, தன்னிச்சைகளை ஒழுங்குபடுத்தத் தொடங்குகிற ஒருவன்—அத் தன்னடக்கப் பாதையை அடைந்து விட்டதாகவே கருதப்படுவான். தன்னடக்கத் தன்மையைப்பற்றிக் குறள் கூறும் கருத்து இதுவே.

"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்." (குறள் : கஉந)

அடங்குதலே அறிவு என்பதையறிந்து நல் வழியினால் ஒருவன் அடங்கப்பெற்றால், அவனது அடக்கம் பெரியோரால் அறியப்பெற்று மேம்பாடளிக்கும்.

மனித இனத்தின் முதல் எதிரியும் இன்பத்தின் கொலையாளியும் அமைதியின் எதிர்மறையும் பற்றேயாகும். கெடுப்பனவும், அழிப்பனவும் அதனினின்றே புறப்படுகின்றன. துன்பத்தின் தோற்றம், கொடுமையின் படைப்பிடம், வழுவும் கேடும் வளருமிடம் இதுதான். பற்று, ஓயாத் துன்பத்தின் உறைவிடமெனவே வள்ளுவரும் கூறினர்.

"அவாவில்லார்க் கில்லாகும் துன்பம்; அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்." (குறள் : நகஅ)

அவாவற்றவர்க்குத் துன்பம் இல்லையாகும்; அவா உண்டாயின் முடிவில்லாமல் துன்பம் மேன் மேலும் வரும்.

தெய்வீக ஒழுங்கமைப்பு, தெய்வீக நற்பண்பு, தூய்மை, அமைதியெனும் நல்வழிகளை அறிந்துணராத பேதைமையில்தான் தன்னலம் எனும் உள்ளுலகம் வேரூன்றியிருக்கிறது. பற்று இருளாகும். மெய்யறிவில்லா இருளுலகில் இவை செழித்துக் கொழிக்கின்றன. மெய்விளக்க ஒளி நிறைந்த உள்ளத்தை, இது அணுக முடியாது. ஒளிபடைத்தவுள்ளத்துப் பேதைமையிருள் ஒழிக்கப்படுகிறது. தூய்மையான நெஞ்சில் பற்றிற்கே இடமில்லை.

> "அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
> தான்வேண்டும் ஆற்றான் வரும்." (குறள் : ௩௬௭)

அவாவை மிகுதியும் கெடுத்தால், கேடில்லாத நல்வினை தான் விரும்பும் வழியால் உண்டாகும்.

பற்பல தோற்றங்களிலுறைகின்ற பற்று ஒரு உள்ள விடாய், உள்ள நோய், ஓயாத் துயர் விளைக்கும் மன அமைதியின்மையாகும். அழகான மாளிகை யொன்றை அழித்து, அதைக் காணத் தகாத ஒரு சாம்பல் திடராக மாற்றிவிடுகிற தீப் போல, பற்றென்னும் தீச்சுடரால் மக்கள் அழிக்கப்படுகின்றனர். அவர்களின் உழைப்புக்களும், செயலாக்கங்களும் ஆங்கு வீழ்ந்து மறைகின்றன.

அமைதியைப் பெற விரும்புகிற ஒருவனே தன் பற்றுற்ற நிலையினின்றும் மீட்சியடைய முடியும். அறிவுள்ள மனிதன் தன் பற்றுக்களை அடக்கியாளுகிறான். அறிவற்றவன் அவைகளால் அடக்கியாளப்படுகிறான். அறிவு நாடுவோன், மடமையைத்

தவிர்ப்பதின் மூலமே அதைத் துவங்குகிறான். அமைதி விழைபவனே அங்குறும் வழியெய்துகிறான். தான் முன் வைக்கும் ஒவ்வொரு அடியின் பொழுதும், தனக்குப் பின்னால் பற்றும் துயரும் நிறைந்த இருளிடத்தை விட்டு நீங்கிச் செல்கிறான்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்." (குறள் : ௩௪௧)

ஒருவன் எதிலிருந்து எதிலிருந்து நீங்கினான்; அவன் அதனால் அதனால் துன்புறுதல் இல்லாதவன்.

தன்னலம் பயக்கும் இன்னலையும், இருளையும் உணருவதே அறிவு, அமைதியெனும் சிறப்புச் சிகரங்களை யடையும் முதற்படி. இதை உணர்ந்து கொண்டால், இழிநிலையை வெற்றி கண்டு அதைத் தவிர்த்து மீட்சிபெறும் நிலை தானாகப் பின் தொடரும்.

"இன்பம் இடையறா தீண்டும்; அவா என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்." (குறள் : ௩௬௯)

அவா என்னும் துன்பங்களுள் மிக்க துன்பமானது கெடுமாயின், இன்பம் இடைவிடாது வந்து சேரும்.

தன்னலம், அல்லது பற்று, ஆவலின் பல்வேறு முரட்டுத் தோற்றங்களிலும், கட்டுக் கடங்காத உள்ள நிலைகளிலும் வாழ்கிறது என்பது மட்டுமல்ல; ஒருவனை வெற்றெண்ணம், தற்புகழ்ச்சி இவைகளின் உறைவிடமாக மாற்றும் சூழ்ச்சி நிறைந்த ஒவ்வொரு எண்ணத்தைப் பற்றியும் எடுத்துரைக்கிறது. பிறரிடம் காணும் தன்னலத்

தைக் கோளுரைக்கிற வகையில் ஒருவனைத் தூண்டி விடுகிறது. அஃதாவது அவர்களைப் பழித்தலும், அதைப்பற்றியே உரையாடுதலுமான நிலை தன்னலம் செய்கிற வஞ்சகம் சூழ்ச்சி ஆகியவற்றின் விளைவுகளாகும். பிறருடைய தன்னலத்தைச் சாடுவதையே தொடர் பணியாகக் கொண்ட ஒரு மனிதன், தன்னலத்தைத் தவிர்க்கவேமாட்டான். பிறரைத் தூற்றுவதால் நாம் நம்முடைய தன்னலத்தை ஒழித்துவிட முடியாது. அது நம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்வதால் ஏற்படுவதாகும்.

"கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு." (குறள் : கஅச)

நோன்பு நோற்றல் ஒருயிரையும் கொல்லாத அறத்தின் பாலது ; அது போன்று சால்பு, பிறரது குற்றங்களைச் சொல்லாத இயல்பின் பாலதாகும் என்று, சான்றாண்மையின் சிறப்பாக வள்ளுவர் இதையே கூறினர். பற்றினின்றும் அமைதியடையும் பாதை, பிறர்க்குத் துன்பந்தரும் குற்றங்களைச் சாட்டுவதல்ல ; தன்னைத்தானே அடக்கியாளும் நிலையாகும். பிறருடைய தன்னலத்தை ஒழிப்பதற்கென முயலுவதின் மூலம், நாம் பற்றினைப் பற்றியவர்களாக வாழ்கிறோம். நம்முடைய தன்னலத்தைப் பொறுமையோடு அடக்கியாளுவதின் மூலமே நாம் விடுதலை நோக்கி முன்னேற முடியும்.

"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு ?" (குறள் : ககூ0)

அயலாரது குற்றத்தைப்போல் தம் குற்றத்தையும் காணமாட்டுவராயின் நிலைபெற்ற உயிர்க்குத் தீமையில்லை. தன்னைத் தானே ஆளுகிற ஒருவனே பிறரைச் சீர்ப்படுத்த முடியும். ஆனால், இவன் பிறரைச் சீர்ப்படுத்தலென்பது தன் அன்பினாலன்றிப் பற்றினாலல்ல.

மதிகெட்ட மனிதன் பிறரைக் குறைகூறித் தானுரைப்பதே சரியெனக் கொள்கிறான். ஆனால், அறிவு வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஒருவன் பிறருரைப்பதே நேர்மையெனக்கொண்டு தன்னைத் தானே குற்றம் சாட்டிக் கொள்கிறான். பற்றினின்று அமைதி யடையும் வழியென்பது, மக்கள் நிறைந்த இவ் வெளியுலகில் எங்கோ துவங்கி எங்கோ முடிவுறுகிற வீதியல்ல. கருத்துக்கள் எனும் அகவுலகின்கண்ணுள்ள ஓர் ஒழுங்கமைப்பாகும். அவ்வழி பிறர் செயல்களைத் திருத்தும் முயற்சியால் அமைந்திருக்கவில்லை; தன்னுடைய செயல்களைத்தானே நேர்மைப்படுத்துவதில் அமைந்திருக்கிறது.

சாதாரணமாக, பற்று நிறைந்த மனிதன் பிறரைச் சீர்திருத்துவதில் மிகுந்த ஆவலுடையவனாக இருக்கிறான். ஆனால், அறிவுள்ள மனிதன் தன்னைப் பண்படுத்துகிறான். உலகத்தைச் சீர்திருத்த எவரேனும் விரும்பினால், அவர் தம்மைத்தாம் சீர்திருத்துவதிலிருந்து அப்பணியைத் துவங்க வேண்டும்.

"தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என் குற்றம் ஆகும் இறைக்கு." (குறள் : ௪௩௬)

தனது குற்றத்தை முதலில் களைந்து, பிறகு பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், தலைவனுக்கு என்ன குற்றம் உளதாகும் என்று தலைவனின் தற்பண்பாக குறள் இக்கருத்தையே எடுத்துரைக்கிறது. தன்னைத்தான் சீர்படுத்தலென்பது, சிற்றின்பப் புலன்களை ஒடுக்கிவிடுதலோடு முடிந்துவிடாது. அதுதான் அச்சீர்திருத்த முயற்சியின் ஆரம்பம். ஒவ்வொரு வெறுமைக் கருத்தையும், தன்னல நோக்கத்தையும் தவிர்த்திடும் நிலை வரும் பொழுதுதான் அது முடிவுறும்.

"அடல் வேண்டும் ஐந்தன்புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு." (குறள் : ௩௪௩)

ஒருவன் ஐம்புலன்களையும் வெல்ல வேண்டும்; விடுதற்குரிய யாவற்றையும் ஒருமிக்க விடுதல் வேண்டும் என்பதே குறள் மொழியுமாகும். தூய்மை அறிவு ஆகியவற்றில் நிறைவுக் குறையிருப்பின், அது அடக்கியாளப்படவேண்டிய தன்னடிமைத்தன்மை அல்லது தவறு ஏதோவொரு தோற்றத்தில் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது என்பதின் எடுத்துக்காட்டு ஆகும்.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்." (குறள் : ௩௪௮)

தீமைகளை முழுதும் துறந்தவர்களே பெருமை அடைந்தவர்கள் ; மற்றையோர் மயக்கமெய்தித் தீமைகளின் வலையில் அகப்பட்டவரே யாவர்.

வாழ்க்கைக் கட்டிடத்தின் ஆதாரத்திலேயே பற்று அல்லது பாசம் இருக்கிறது. அமைதியே அக்கட்டிடத்தின் முடியும் உச்சியுமாகும். எனவே, பற்று இன்றியமையாத ஒன்றேயாகும். தொடங்குவதற்குப் பற்றில்லையெனின், பின் உழைத்தற்குரிய வலுவும், அடைதற்கென ஒரு விளைபயனும் இராது. வல்லமையின் அறிகுறியே பற்று. ஆனால், தவறான வழியில் திருப்பப்பட்டுக் களிப்பிற்கு மாறாகக் களங்கத்தை உண்டு பண்ணுகிற வல்லமையாக இருக்கிறது. இதன் வலிமை, மதியற்றவர்கள் கையில் அழிவுக்கருவிகளாக இருந்தாலும், அறிவுள்ளவர்கள் கையில் ஆக்கக்கருவிகளாக இருக்கிறது. எனவே, இப்பற்றுக்களைத் தணிவுறுத்தி, ஒருங்கமைத்து, நன்மை தரும் வகையில் திருப்பினால், அவை உழைப்பின் ஊக்கமாக உருப்பெறும். விண்ணுலக வாயிற் காக்கும் வாள் இப்பற்றே. இது அறிவிலியைப் புறந்தள்ளி அழிக்கிறது; அறிஞனை இடமளித்துக் காக்கிறது.

தன்னுடைய பேதைமையின் எல்லையைத் தெரிந்துகொள்ளாதவனும், தன்னலக் கருத்துக்களுக்கு அடிமையாக இருப்பவனும், பற்றின் தூண்டுதலுக்குப் பணிபுரிபவன்; மதியற்ற மனிதன். தன்னுடைய பேதைமையைத் தெரிந்து கொள்ளுபவனும் தன்னலக் கருத்துக்களின் வெறுமையை உணருபவனும், பற்றின் தூண்டுதலை அடக்கியாளுபவன் ஆவன்; அவனே அறிவுள்ள மனிதன்.

மதியிலி ஆழத்திலும் ஆழமாகப் பேதைமையி னுள் புதைகிறான். அறிஞன் மேன் மேலும் உயர் வடைகிறான். அறிவிலி இச்சிக்கிறான்; இன்ன லடைகிறான்; இறக்கிறான். அறிஞன் உயர்வு நாடு கிறான்; அகமகிழ்கிறான்; வாழ்கிறான். எனவேதான், அறிவிலார் தமக்குத்தாம் விளைக்குந் துன்பத்தைப் பற்றி நாயனார் இவ்வாறு கூறினார்.

“அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.” (குறள்: அ௪௩)

அறிவில்லாதவர்கள் தாமே தம்மைத் துன்பப் படுத்திக்கொள்ளும் துன்பமானது, தம்முடைய பகைவர்க்கும் செய்தல் அரிது. ஒருவன் பகை வர்க்கு விளைக்கும் துன்பத்தை விடப் பன்மடங்கு கூடுதலானது, அறிவிலார் தமக்குத்தாம் விளைக்குந் துன்பம் என்று பேதைமையின் இழிநிலையை எடுத்துரைத்தனர் வள்ளுவர்.

அறிவு நாடும் மனத்தோடும், உயர்வுறும் உளப்பாங்கோடும் அறிஞனாகிய மறவன், உயர்வுப் பாதையைக் காணுகிறான்; தன் சிந்தையை அமைதி யின் உச்சிகளின் மீது நிலையுறுத்துகிறான்.

“அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.” (குறள்: ௪௩0)

அறிவுடையோர் எல்லாம் உடையவராவர்; அறிவில்லாதவர் எதை உடையவராயிருப்பினும் ஒன்றும் இல்லாதவராவர்.

---

## உ. உயர்வுநாட்டம் - -

"உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து." (குறள் : ருகசு)

ஒருவன் தன் பேதைமையைத் தெளிவாகக் காணுகிறபொழுது, ஆக்கத்திற்கான சால்பு வந்து சேருகிறது. எனவே, அறிஞர்களின் கழிபேருவகையான உயர்வுநாட்டம் அவன் நெஞ்சில் பிறந்து விட்டது.

மண்ணுலகிலிருந்து, விண்ணுலகிற்கு - பேதைமையிலிருந்து அறிவிற்கு - கீழிருளிலிருந்து மேலொளிக்கு மனிதன் உயர்வு நாட்டத்தின் இறகுகளில் அமர்ந்து செல்லுகிறான்.

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து." (குறள் : கருங)

ஐயத்தினின்றும் நீங்கி மெய்யறிவு தெளிந்தவர்கட்கு வையகத்தினும் வானம் நெருங்கி யிருத்தலை உடைத்து என்ற வள்ளுவர் வாக்கும் இக்கருத்தையே கூறுகிறது. இவ்வுயர்வு நாட்டமில்லையேல் மனிதன் மண்ணுலக, சிற்றின்ப, தெளிவில்லாத, ஒளிபெறாத, கீழ்நிலையிலுள்ள விலங்காகவே வதிகிறான்.

விண்ணுலகப் பொருட்களை வேண்டி நிற்பதே உயர்வு நாட்டமாகும். நீதி, இரக்கம், தூய்மை,

அன்பு ஆகிய இவையெல்லாம் மண்ணுலகப் பொருட்களை வேண்டி நிற்கும் இச்சையினின்றும் வேறுபட்டன வாகும். தன்னல உடைமைகள், தன்மூப்பு, கீழ்த்தர இன்பங்கள், புலனுணர்வு மகிழ்ச்சி ஆகிய இவையெல்லாம் மண்ணுலகப் பொருட்களின்பாற் படும்.

"பொருள்அல் லவற்றைப் பொருள்என் றுணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு." (குறள் : ௩௫௧)

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப் பொருள் என்று அறியும் மயக்க முடையான், மாண்பில்லாத பிறப்பினன் ஆவான்.

தன் இறகுகளை இழந்துவிட்ட பறவை பறக்க முடியாது என்பது யாவருமறிந்த உண்மை. அது போல உயர்வுநாட்டமில்லாத மனிதனுக்குத் தன்னுடைய சூழ்நிலையிலிருந்து உயர்வடைதலும், தன்னுடைய விலங்கின எண்ணங்களுக்குத் தான் அதிகாரியாகுதலும் இயலாது. இதனையே "உள்ளம் உடைமை உடைமை" எனப் பொய்யாமொழியும் கூறிற்று. உயர்வுநாட்ட மில்லாதவன், தன்னலப் பற்றுக்களுக்கு அடிமையாக இருக்கிறான். அவன், மாறுபட்டுக்கொண்டே யிருக்கும் நிகழ்ச்சிகளில் அகப்பட்டுத் தத்தளிக்கிறான்.

ஒருவன் உயர்வுநாட்டம் கொள்ளத் துவங்கி விட்டான் என்றால், தன் சூழ்நிலையை வெறுத்து விட்டான் என்றும், ஓர் உயர்நிலையை அடையக் குறிக் கொண்டுவிட்டான் என்றுந்தான் பொருள்.

விலங்குத் தன்மையெனும் நீள் துயிலினின்றும் விழிப்படைந்து, நற்பேறுகள், நிறைவாழ்வு ஆகியவற்றின் தன்மைகளைப்பற்றி நன்ருக உணர்ந்து கொண்டான் என்பதின் அறிகுறியே.

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு." (குறள்: ௩௫௨)

மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற மெய்யறிவுடையார்க்கு, அவ்வறிவு அறியாமையை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்.

உயர்வுநாட்டம் எல்லாக் காரியங்களையும் இயலுவதாக்கி விடுகிறது; முன்னேற்றப் பாதையைத் திறந்துவிடுகிறது; நாம் கற்பனை செய்கிற உயர்ந்த நிறைவுநிலையைக்கூட அண்மையில் ஆக்குவதோடு, அதை உண்மையாகவும், இயலுவதாகவும் ஆக்கிவிடுகிறது. இக் கருத்தையே குறள், பண்புடைமையானது எளிது என்று கூறுகிறது.

"எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு." (குறள்: ௯௯௧)

யாவரிடத்திலும் எளிய சமயத்தை உடையவரா யிருத்தலால், பண்புடைமை என்னும் நன்னெறியை அடைதல் எளிது என்று அறிவுடையோர் சொல்லுவர். எனவே, நாம் எண்ணத்தி லெழுப்புவதை எய்துதல் இயலுவதேயாகும்.

தெய்வீக அருட்பிறப்பே உயர்வுநாட்டமாகும். இஃது இன்பக் கோட்டையின் கதவுகளைத் திறந்து விடுகிறது. தளர்வுருத உயர்வுநாட்டங்களும்,

பின்னடையாத அருளுணர்வும் உடையவன் கையில் இசை, கவிதை, வரும்பொரு ளுரைத்தல்போன்ற உயர்வான ஆற்றல்கள் சிறந்த கருவிகளாகப் பயன் படுகின்றன.

"நல்ஆற்றான் நாடி அருள்ஆள்க; பல்ஆற்றான்
தேரினும் அஃதே துணை." (குறள் : உசஉ)

ஒருவன் நல்ல வழிகளினால் விரும்பி அருளை மேற்கொள்ளக் கடவன்; பல வழிகளால் ஆரா யினும் தனக்கு அவ் வருளே துணையாகும்.

விலங்குத் தன்மைகள் இனிமை பயப்பதாகக் கருதுகிற வரையில், மனிதன் உயர்வு நாட்டமுறு தல் முடியாது. அவன் அவ் விலங்குத் தன்மைக ளோடு மனநிறைவடைந்து விடுகிறான். ஆனால், அவற்றின் இனிப்பு, கசப்பாக மாறுகிறபொழுது தான், படுகிற துன்பத்தால் சிறந்த பொருட்களைப் பற்றி எண்ணுகிறான். மண்ணுலக இன்பத்தைப் பறிகொடுத்த பிறகே விண்ணுலக இன்பத்தை நாடுகிறான். தூய்மையின்மை துயரமாக மாறுகிற பொழுதுதான் தூய்மை தேவைப்படுகிறது. எனவே தான் வள்ளுவர் இவ்வாறு கூறினர்.

"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்." (குறள் : சுருச)

மேலாக உயரக்கடவோம் என்று எண்ணு பவர், புகழ் கெடும் தொழில்செய்தலை ஒழியக் கடவர் என்பதே குறள் வகுத்த நெறி. உண்மை யில், கழிந்ததெண்ணிக் கலங்குதல் என்னும் நிலையி

லிருந்தே உயர்வுநாட்டம் வளருகிறது. ஆனால், அதன் வலிமைபொருந்திய இறகுகளின் மீதமர்ந்து மனிதன் விண்ணுலக உச்சியை அடைந்துவிடலாம்.

உயர்வுநாட்டமுள்ள மனிதன் அமைதியில் முடிவுறுகிற பாதையில் செல்லுபவன் ஆகிறான். அவன் புறப்பட்ட இடத்தே தங்கிவிடாமலும் வழி செல்லச்செல்லத் திரும்பிப் பார்க்காமலும் இருப்பானாயின், உறுதியாக அம்முடிவை அடைந்து விடுவான். விண்ணுலக ஒளிச்சுடர்களால் தொடர்ந்து தன்னுடைய மனத்தைப் புதுப்பித்துக் கொண்டே யிருப்பானாயின், அவன் விண்ணுலக நிலையை அடைந்தே தீருவான்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்." (குறள் : சுசுசு)

கருதியவர் வினைக்கண் திண்மை உண்டாகப் பெற்றால், கருதிய பொருள்களை அவ்வாறே அடைவர்.

மனிதன் பெறுகிற பேறுகள் அவனுடைய உயர்வுநாட்டத்தின் அளவை யொத்ததாகவே அமையும். அவன் எவ்வண்ண மிருப்பான் என்பதின் அளவுகோல், அவன் எவ்வண்ணம் இருக்க விரும்புகிறான் என்பதேயாகும்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு." (குறள் : ருகரு)

நீர்ப் பூக்களின் தாள்களின் நீளங்கள் அவைகள் வளரும் நீரினது ஆழத்தின் அளவினவாகும்;

அதுபோல மக்களது உயர்ச்சி அவர்களது ஊக்கத்தினது அளவினதாம். உள்ளத்தை ஒருமுகப் படுத்தலென்பது பெறவிருக்கும் ஒரு பேற்றை முன்பாகக் கற்பித்துக் கொள்ளுதலே யாகும். மனிதனுக்கு எல்லாக் கீழ்ப் பொருள்களையும் நுகரவும், அறியவும் முடியும். அதையொத்து எல்லா உயர் பொருள்களையும் நுகருவதும், அறிவதும் இயலுவதே. பண்பில் விலங்காக இருந்தவன் மனிதனாக மாறிவிடுவது போலத் தெய்வீகத் தன்மையுடையவனாக மாறுதலும் முடியும். உயர்ந்த தெய்வீகத் தன்மைகளின்பால் உள்ளத்தைத் திருப்புவதே ஒருவனுடைய இன்றியமையாத ஒரே கடமையாகும். இவ்வுள்ள ஊக்கத்தின் இன்றியமையாமையை வள்ளுவரும் எடுத்தோதினர்.

"உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு." (குறள் : ருகூஅ)

உள்ள ஊக்கம் இல்லாதவர் இவ் வையத்தாருள் யாம் வண்மை யுடையோம் என்னும் மதிப்பை அடைய மாட்டார்கள்.

நினைப்பவனின் தூய்மையற்ற எண்ணங்களைத் தவிரத் தூய்மையின்மை வேறெதுவாக இருக்க முடியும்? நினைப்பவனின் தூய்மையான எண்ணங்களைத் தவிர தூய்மை வேறெதுவாக இருக்க முடியும்? ஒரு மனிதன் பிறனொருவனுக்காக எண்ண முடியாது. ஒவ்வொரு மனிதனின் தூய்மையும் தூய்மையின்மையும் அவனுக்கே உரியவாவன.

"பிறருடைய சூழ்நிலைகள், குலக் குணங்கள் ஆகியவற்ருலேயே நான் தூய்மையற்றவனுக இருக்கிறேன்," என்று ஒரு மனிதன் கருதினுல், அவன் தன்னுடைய தவறுகளை எவ்வாறு தவிர்க்க முடியும்? அவ்வகையான எண்ணம் அருள்நாட்டம் கொள்வதினின்றும் அவனைத் தடைப்படுத்துவதோடு, பற்றின் அடிமையாகவும் அவனைப் பிணைத்துவிடும்.

தன் தவறுகளும், தூய்மையின்மைகளும் தனக்கே உரியவை என்பதையும், அவையனைத்தும் தன்னுல் உருவாக்கப்பெற்று வளர்க்கப்பட்டதாகுமென்பதையும், அவைகளுக்குத் தானே பொறுப்பாளி என்பதையும் நன்ருக உணருகிற ஒரு மனிதன் அவற்றை வெற்றிகாண்பதில் நாட்டம் கொள்ளவேண்டும். அப் பேற்றை அடையும் வழி அவனுக்குத் தானுகவே தென்படும்.

பற்ருல் கட்டுண்ட மனிதனுக்கு எவ்வித நேர் வழியும் தென்படுவதில்லை. ஆனுல், அவன் பின்புறத்தில் இருளும், புயலுமே எங்கும் நிறைந்துள்ளன. அவன் அவ்வவ் விநாடியில் விளைகிற இன்பத்தைக் கருதுகிருனே ஒழிய, அறிவுபெற வேண்டுமென்று முயலுவதில்லை.

**" பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை**
**கைஅல்ல தன்கண் செயல்."** (குறள்: அ௩உ)

ஒருவனுக்கு அறியாமைகளிலெல்லாம் மிக்க அறியாமையாவது தனக்காகாத ஒழுக்கத்தின்கண்

விருப்பம் கொள்ளுதல் என்றும், பேதைமை யின் எல்லையே இதுவென்றும் நாயனுர் கூறுகிருர். அத்தகையவன் அறிவைப்பற்றி எண்ணுவதுகூட இல்லை. குழப்பம், மலேப்பு, இடர் முதலியன நிறைந்த தாக அவனுடைய பாதை அமைந்து விடுகிறது. அவன் நெஞ்சிற்கும் அமைதிக்கும் அதிக தூரம் என்னும் நிலேயும் ஏற்படுகிறது.

உயர்வு நாடும் மனிதன் விண்ணுலக உச்சிக ளுக்கு அழைத்துச் செல்லும் பாதையைத் தன் முன்பு காண்கிருன். இதுவரையில் கண்மூடித்தன மாய்ப் பின்பற்றிச் சென்ற பற்றின் நெளிவு வளேவு கள் தற்பொழுது அவன் பின்புறத்திலாகி விடுகின் றன. அறிவைப் பெறுவதில் நோக்கமமைந்து அறிவின்பாலே தன்னுள்ளத்தைச் செலுத்துகிற அவனுக்குத் தெளிவான நெறியமைந்து விடுகிறது. இறுதியில் அடையவிருக்கும் அமைதி யின்பத்தை முன்பாகவே சுவைப்பது போன்ற உள்ளுணர்வை யும் அவன் பெறுகிருன்.

பற்றினேப் பற்றி விடாதார் எளிய பொருட் களே அடைவதற்குப் பெருமுயற்சி செய்வர்.

"சிற்றினம் அஞ்சும் பெருமை ; சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்." (குறள் : ௪௫௧)

பெரியோர் இயல்பு சிறிய இனத்தைக் கண்டு அஞ்சும் ; சிறியோர் இயல்பு அதைச் சேர்ந்தபோதே தனக்கு உறவாக எண்ணித் துணியும். அச் சிற்றி யல்பினேர் விரும்பும் பொருட்கள் மிக விரைவில்

அழிவனவும், அவற்றைக் கொண்டிருந்தோரின் நினைவுக்கென எதையும் விட்டுச் செல்லாதவைகளு மாகும். இந்த வெறுமை விருப்பத்தையே வள்ளு வர் பேதைமையின் உருவகமாகக் கொள்கிறார்.

"பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல்." (குறள் : அ௩௧)

அறியாமை என்று சொல்லப்படுவது எது என்றால், அது குற்றம் தருவனவற்றைக் கொண்டு நன்மை தருவனவற்றைக் கைவிடுதலாகும்.

உயர்வு நாடும் மக்களும் அதையொத்த பெரு முயற்சிகள் செய்கின்றனர். ஆனால், அவை சிறந்த பொருட்களை அடையும் பொருட்டாகும். அவர் கள் விரும்புகிற பொருட்கள் ஒழுக்கம், கல்வி, அறிவு எனும் அழியாப் பொருட்களாகும்.

"அன்பறிவு, தேற்றம், அவாவின்மை இந் நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு." (குறள் : ௫௧௩)

அன்பு, அறிவு, ஆராய்ந்து துணிதல், அவா வின்மை ஆகிய இந் நான்கும் நிலைபெற உடையவ னிடமே தெளிவு உள்ளது. இப் பண்புகள், மனித இனத்தைக் கைகொடுத்துயர்த்தத் தூண்டுகிற நினைவுக் குறிகளாக என்றென்றும் நின்று நிலவும்.

வணிகனொருவன் தன் ஓயாத உழைப்பால் செல்வப்பேறு பெறுதல் போல, அறிஞன் தன் உயர்வுநாட்டத்தாலும் முயற்சியினாலும் அருட் பேறு பெறுகிறான். தன் எண்ணச் சத்தியை ஒரு குறிப்பிட்ட வழியே செலுத்துவதின் மூலம் ஒரு

வன் பெரு வணிகனுகிருன். ஒருவன் பேரறிஞனு கிருன்.

"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்." (குறள் : சுகக)

நமது தொழில் அருமையானது என்று எண்ணித் தளராதிருத்தல் வேண்டும்; அதை முடித்தற்குரிய பெருமையை முயற்சியானது நமக்கு உண்டாக்கும்.

உயர்வுநாட்டக் களிப்பு ஒருவன் உள்ளத்தைத் தொட்டுவிட்டால் போதுமானது. உடனே அது அவ்வுள்ளத்தைப் பண்படுத்துகிறது. தூய்மையின்மை அங்கிருந்து மறையத் துவங்கிவிடுகிறது. உள்ளத்தில் உயர்வுநாட்டம் நிறைந்திருக்கும் பொழுது தூய்மையின்மை அங்குப் புகுதலியலாது. ஏனெனின், தூய்மையின்மையும், தூய்மையும் ஒரே பொழுதில் கருத்தினுள் அமைந்திருக்க முடியாது. ஆனுல், உயர்வு நாடும் முயற்சி முதலில் வெறுப்புத் தருவதாகவும், நிலையற்றதாகவும் தோன்றுகிறது; அம் முயற்சியிலீடுபடுகிற ஒருவனுடைய மனம் தனக்குப் பழக்கமான தவறு நோக்கித் திரும்பிவிடுகிறது. எனவே, முயற்சியைத் தொடர்ச்சியாகப் புதுப்பித்துக் கொண்டேயிருத்தல் வேண்டும்.

தூயவாழ்வு விழைபவன் உயர்வுநாட்டமென்னும் ஊக்கமூட்டும் அரிய உணர்ச்சியால் தன்னுள்ளத்தை நாள்தோறும் புதுப்பித்துக்கொள்ளுகின்றுன். அதிகாலையில் எழுந்து, தளரா முயற்சியோடு

உறுதியான கருத்துக்களால் தன்னுள்ளத்திற்கு அரணமைக்கிறான். உள்ளம் ஒரு விநாடியேனும் ஓய்ந்திருக்காத தன்மையுடையது என்பது அவனுக்குத் தெரியும்; உயர்ந்த கருத்துக்களாலும், தூய உயர்வுநாட்டங்களாலும் மனதை நிரப்பிப் பின் நெறிப்படுத்தா தொழிந்தால், கீழ்த்தர எண்ணங்களும், இழிவிச்சைகளும் நிறைந்து அது புன்னெறியில் ஈடுபட்டுவிடும் என்பது உறுதியாகும்.

இச்சையைப் போன்று, நாடொறும் பழக்குவதின் மூலம் உயர்வுநாட்டத்திற்கும் ஊண் தந்து, உரம்பெருக்கி, உறுதியாக்குவது இயலுவதே யாகும். முயற்சியால் அதை ஒரு தெய்வீக வழிகாட்டியாகக் கொள்ளவும் முடியும்; இல்லையேல் அதனைப் புறக்கணித்து ஒதுக்கவும் முடியும்.

“சிதைவிடத் தொல்கார் உரவோர்; புதை அம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு.” (குறள் : ருகஎ)

யானையானது பல பல அம்புகளால் புண்பட்ட போதும் தளராமல் தன் பெருமையை நிலை நிறுத்தும்; அது போல ஊக்கமுடையவர் தமது முயற்சிக்கு அழிவு வந்த போதும் தளரமாட்டார்கள் என்பதே வள்ளுவர் கருத்துமாகும். நாடோறும் சிறிது நேரம் அமைதி சூழ்ந்த ஓரிடத்திற்குச் சென்று மிகப் பொங்கும் அலைகளையொத்த மனச் சத்திகளை ஒருமுகப்படுத்தி அருட்களிப்படைவதென்பது, பெரும் அருட்பேறுகளைப் பெறுவதற்கும், தெய்வீகப் பண்படைவதற்கும் உள்ளத்தைப் பயிற்சி

செய்யும் வகையாகும். அத்தகைய களிப்பே அறிவின் ஆயத்தமும், அமைதியின் ஆரம்பமுமாகும். தூய்மையான பொருட்களைப் பற்றிச் சிந்திக்கு முன்னரே அவற்றின் நிலைக்கு உள்ளம் உயர்வு படல் வேண்டும். உயர்வுநாட்டமே இதனை நிறைவேற்றி வைக்கும் கருவியாகும். உள்ளம், இதனுதவிகொண்டு விரைந்து பறந்து சென்று விண்ணுலக இடங்களை அடைவதோடு, தெய்வீகப் பொருட்களை நுகரவும் துவங்குகிறது. மேலும், அறிவுதிரட்டும் பாதையிலீடுபடுவதோடு, என்றென்றும் பெருகிக் .கொண்டேயிருக்கும் மெய்யறிவென்னுந் தெய்வ ஒளியால் தன்னைத்தான் நெறிப்படுத்தவும் கற்றுக்கொள்ளுகிறது.

நீதித்தாகம், நெறிவாழ்வுப் பசி, அருட்களிப்படைய உண்மையான உயர்வுநாட்டம் ஆகிய இவை, அறிவின் சரியான பாதை; அமைதியெய்தும் சீரிய முயற்சி; தெய்வீக வழியின் தோற்றுவாய்.

> "கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
> சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு." (குறள்: ௯௮௧)

தகுதியறிந்து நற்குணங்களால் நிறைந்து அவைகளை ஆளுந்தன்மையை மேற்கொண்டொழுகுபவர்க்கு, நல்லவை அனைத்தும் இயற்கையாயுள்ளன என்று அறிவுடையோர் கூறுவர்.

# ௩. அவாவெழுச்சி

> “அஞ்சுவது ஓரும் அறனே, ஒருவனை
> வஞ்சிப்பது ஓரும் அவா.” (குறள்: ௩௬௬)

உயர்வுநாட்டம் ஒரு மனிதனை விண்ணுலகிற்குக் கொண்டு சென்று விடும். ஆனால், அங்கேயே தங்குவதற்கு அவன் தன்னுள்ளத்தைத் தெய்வீக நிலைகளுடன் இணைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

கருத்தில் தூய்மையினின்றும் நீங்கிப் பாசத்திற்குத் திரும்புவதே அவாவெழுச்சி; அது, உயர்வுநாட்டத்தினின்று, இச்சைக்குப் பின்னுறுதலேயாகும். தூய அறிவு. அமைதியான கருத்து எனும் நீரால் இச்சை தணிக்கப்பட்டுவிட்டது எனும் நிலை ஏற்படுகிற வரை, அவாவெழுச்சி உயர்வுநாட்டத்தை அச்சுறுத்துகிறது. உயர்வுநாட்டத்தின் ஆரம்ப நிலைகளில் அவாவெழுச்சி மிகுதியாகவும், வலிமை பொருந்தியதாகவும் இருக்கிறது; ஏன், ஒரு எதிரியாகக்கூடக் கருதப்படுகிறது. ஆனால், எதிரியென்பது அவாவெழுச்சி காட்டுகிற பொருள் தன்னுடைய எதிரியே தவிர, அவாவெழுச்சியல்ல. ஏனெனில், அவாவெழுச்சி தளர்ச்சியையும், தூய்மையின்மையையும் வெளிப்படுத்துகிற ஒரு நண்பனேயாகும். இஃது அருட் பயிற்சிக்கு இன்றியமையாத ஒரு நிலை. புன்னெறி துறந்து நன்னெறியைக் கடைப்பிடிக்-

கும் முயற்சியின் துணையுமாகும். ஒருவனிடமுள்ள புன்னெறி வெளிப்படத் தோன்றுகின்றபொழுது தான், அவன் அதனையொழித்து முழுவெற்றி காண முடியும். இந்த அவாவெழுச்சியே நெஞ்சில் மறைந்துள்ள புன்னெறியை வெளிப்படுத்தித் தெளிவாக்குகிறது. அவாவெழுச்சியைக் கிளறுவதும், தூண்டுவதும் கீழடக்கவொண்ணு இச்சைகளே. ஒரு மனிதன் பேராசையின் விசைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளுகிற வரையில் அவாவெழுச்சி திரும்பத் திரும்ப அவனைத் தாக்கவும், தன் வயப்படுத்தவும் முயற்சிக்கும்.

> "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று
> நிலையாமை காணப் படும்." (குறள்: ௩௪௯)

ஒருவன் தீமைகளின்பால் பற்றற்ற உடனே அவற்றின் பிறப்பிடத்தை அறுப்பான்; பற்று அருதபோது நிலையாமையாகிய தீமைகளே அறியப்படும். தூய்மையின்மையிடம் முறையிடுதலே அவாவெழுச்சி. தூய்மையானவொன்று அவாவெழுச்சியின்கண் அடைபடாது.

உயர்வு நாடும் மனிதனுக்குத் தெய்வீக உளப்பண்பு ஏற்படுகிற வரையிலும், அவாவெழுச்சி அவனைச் சதி செய்யக் காத்திருக்கும். ஆனுல், அவ்வெல்லைக் கோட்டிற்கு அப்பால் அவாவெழுச்சி அவனைத் தொடர முடியாது. ஒரு மனிதன் உயர்வு நாட்டங்கொள்ளத் துவங்கும்பொழுதுதான், அவாவெழுச்சியாலும் தாக்கப் பெறுகிருன். ஒருவன் தன்னைப்பற்றித் தானே தெளிவுறத் தெளிந்து

கொள்ளுகிற வரையில் உயர்வு நாட்டம் அவனிடம் மறைந்து கிடக்கும் நன்மையையும், தீமையையும் எடுத்துக் காட்டுகிறது. தன்னைச் சரிவர உணர்ந்து கொள்ளாத ஒரு மனிதன் தன் இழிநிலையை வெற்றிகாண முடியாது. ஒருவன் வெறும் விலங்கு மனிதனாகவே இருந்தாலும், அவனிடம் அவா வெழுச்சி யுள்ளதெனின், அஃது அவனுள்ளத்துத் தூய நிலையடைதற்குரிய எண்ணமிருக்கிறது என்பதையே காட்டும். விலங்குத்தன்மைகளையும், இச்சையையும் நிறைவேற்றுவது உயர்வுநாட்டமில்லாத மனிதனுடைய சாதாரண நிலையாகும். புலனுணர்வுக் களிப்பைத்தவிரக் கூடுதலாகச் சிறந்த வேறெதையும் அவன் விரும்புவதில்லை. அவ் விநாடியில் அவனிச்சை நிறைவேறுவதோடு மன அமைதியும் அடைந்து விடுகிறான். அத்தகைய மனிதன் அவாவெழுச்சியால் தாக்குற்றுத் தாழ்வடையமாட்டான். ஏனெனின், இதுவரை அவன் உயர்வடையவே இல்லை.

ஒருவனிடமுள்ள உயர்வுநாட்டத் தோற்றம் அவன் உயர்வு நோக்கி ஓரடியேனும் எடுத்து வைத்துவிட்டான் என்பதின் எடுத்துக்காட்டு ஆகும். எனவே, அவன் பின்னிழுக்கப்படலாம். இவ் வித பின்னடைவு நோக்கமே அவாவெழுச்சியென அழைக்கப்படுகிறது. அவாவெழுச்சி உள்ளத்தி லுள்ள தூய்மையில்லாக் கருத்துக்களிலும், இழிந்த விருப்பங்களிலுமே உறைகிறது. இச்சையில்லாத உள்ளத்தைப் பற்றியிழுக்கும் வலிமை

அவாவெழுச்சிக்குக் கிடையாது. அவாவெழுச்சியின் அரண், ஒரு மனிதனின் மனதில் இருக்கிறதே ஒழிய புறத்திலில்லை. ஒருவன் இதையுணர்ந்து கொள்ளாத வரை அவாவெழுச்சி நிலையும் நீடித்துக்கொண்டேயிருக்கும். புறப்பொருள்களின்கண்ணே தான் அவாவெழுச்சி உறைகிறது என்னும் தவருன கருத்தில் புறப்பொருட்களைத் தவிர்த்துவிட முயலுகிற ஒருவன், அப்போதே தன் தூய்மையற்ற கற்பனைகளைத் தடுத்துத் தவிர்க்கவில்லையெனின், அவன் பல துன்பமான வீழ்ச்சிகளை அடைவான்.

> "அற்றவர் என்பார் அவாவற்ருர்; மற்றையார்
> அற்ருக அற்ற திலர்." (குறள் : ௩௬௫)

அற்றவர் என்போர் அவாவற்றவர்; அஃதற்ருத பிறர் அவர் போல அற்றவர் இலர். தீமை தன்னகத்தே உள்ளதே தவிரப் புறத்தல்ல என்பதை ஒருவன் தெளிவுறத் தெரிந்துகொண்டால், அவன் விரைவில் முன்னேற்றம் அடைவான். அருட் பார்வைக்காக அவன் எடுக்கும் முயற்சியால் இறுதியில் அவாவெழுச்சியை வெற்றி கொண்டுவிடுவான்.

அவாவெழுச்சி ஒரு வதை. ஆனல், அது நிலை பெற்றதல்ல. அது கீழ்நிலையிலிருந்து உயர்நிலைக்குச் செல்லும் வழியாகும். நிறைவான முழுவாழ்வென்பது பேரின்பமன்றித் துன்பமல்ல. இயலாமையையும், தோல்வியையும் தொடர்ந்துதான் அவாவெழுச்சி வரும். ஆனல், அம்மனிதன் வலுவும் வெற்றியும் பெறுதற்கென விதிக்கப்பட்டுவிட்

டான் என்றுதான் கொள்ளவேண்டும். துன்பத்தின் தோற்றம், வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் அறிகுறியாகும். உறுதியுடனும், இடைவிடாமலும் உயர்வு நாடும் மனிதன் அவாவெழுச்சி தவிர்க்க முடியாத எண்ணத்தில் ஒன்றையேனும் தோன்ற இடந்தரவேமாட்டான். அவன் தனக்குத் தானே தலைவன் எனும் நிலையெய்த உறுதிகொண்டு விடுகிருன்.

" ஆக்கம் இழந்தேம் என் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்." (குறள் : ருகூச)

ஊக்கத்தை உறுதியாகத் தம்மிடத்தே உடையவர் 'கைப்பொருளை இழந்தோம்' என்று தளரமாட்டார். தீமைக்குக் கீழ்ப்படிதலென்பது தோல்வியின் அறிகுறி. தன்னுள்ளத்து நடந்த போரில், தான் தீமையெனும் எதிரிக்குப் புறமுதுகு காட்டிவிட்டான் என்பதையும், நன்மையைப் புறமொதுக்கித் தீமைக்கு முதன்மை தந்துவிட்டான் என்பதையுமே இது தெளிவுறுத்துகிறது.

ஊக்கமுள்ள வணிகன் ஏற்படுகிற இடையூறுகள் கண்டு கலங்கிவிடுவதில்லை. அவன் அவற்றை எங்ஙனம் தவிர்க்க முடியுமெனக் கற்றுக்கொள்கிருன். இதுபோலத் தளராது உயர்வு நாடும் மனிதனும் அவாவெழுச்சியால் அமிழ்வுற்றுத் தாழ்வடைவதில்லை. தன்னுள்ளத்திற்கு அரணமைத்தல் எவ்வாறெனச் சிந்திக்கிருன். ஏனெனின், அவா, கோழைத்தனம் நிரம்பிய ஒன்ருகும். தளர்வுற்றும், பாதுகாப்பில்லாமலும் இருக்கும் மன நிலைகளில் தான், அஃது உள்ளே புகுந்துவிடுகிறது.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்." (குறள்: ௬௨௦)

தளராமல் முயற்சி புரிவோர், பயனை விலக்கு வதாகிய ஊழையும் புறம் காட்டி ஓடக் காண்பர்.

அவாவினால் தூண்டப்படுகிற ஒருவன், அவா வெழுச்சியின் இயல்பையும், பொருளையும் மிகுந்த கூர்மையுடன் கற்றுணர வேண்டும். அது தவிர்த் தற்கியலாததல்ல என்பதை உணரும்வரையில் கற்றுணரவேண்டும். அறிவுள்ள போர்த்தலைவன் ஒருவன், எதிரியைத் தாக்கு முன்னர் எதிரிப் படை களின் வலுவையும், தன்மையையும், அவற்றின் தாக்குதல் முயற்சிகளையும் நன்கு கற்றுணருகிறான். எனவே, இதையொத்து அவாவெழுச்சியை அடக்கி யாள வேண்டுமென்று விரும்புகிற ஒருவன், அது, தன் இருள்தன்மையினின்றும், தவற்றிலிருந்தும் எங்ஙனம் பிறக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மனதில் தானே பல வினாக்களை எழுப்புவதின்மூலம் அகம் பகுத்துணர்ந்து, சிந்தனை செய்து தவறென்னும் இருளையொழித்து மெய் யென்னும் ஒளிவிளக்கேற்றுதல் எவ்வாறு என்ப தையும் புரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு மனிதனுடைய பற்றுக்கள் வலுவுள்ள தாக இருப்பின், அவாவெழுச்சிகளும் கொடுமை யானதாகவே இருக்கும். ஆழ்ந்த தன்னலம் அவ னிடமிருப்பின், அவாவெழுச்சிகளும் மிகக் கூர்மை யுடையதாக இருக்கும். மிகுந்த ஆணவம் அவனிட

மிருப்பின், அவாவெழுச்சிகளும் மிகுந்த ஏமாற்றந் தரும் தன்மையுடையனவாக இருக்கும்.

மெய்யறிவு பெற ஒரு மனிதன் தன்னை நன்ருக அறிந்துகொள்ள வேண்டும். தன் தவற்றை வெளிப்படுத்தும் என்று எண்ணித் தான் கொண்ட கருத்தை வெளியிடப் பின்னடைதல் கூடாது. எதிர்மாருகக் கருதியதை வெளியிடும் தன்மைகளைத் தன்னறிவுபெறும் துணைக்கருவிகளாகக் கொண்டு அவற்றை வரவேற்க வேண்டும்.

"உளர்எனினும் இல்லாரோ டொப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல் லாதார். (குறள் : எ௩௦)

அவைக்கு அஞ்சித் தாம் கற்றவைகளை அவைக்கு ஏற்கச் சொல்ல மாட்டாதவர்கள், உயிருடன் இருப்பினும் இறந்தவரோடு ஒப்பாவார் என்றே வள்ளுவரும் கூறினர்.

தன்னுடைய குற்றங் குறைகளை அறிந்து கொள்வதைச் சகிக்காமல் அவற்றை மறைக்க முயலுகிற மனிதன், மெய்ம்மை எனும் நெறியில் நின்ருெழுகத் தக்கவனுகமாட்டான். அவன் போர் புரிந்து, அவாவெழுச்சியை வெற்றி காணத் தகுதியான திட்டம் கொண்டவனல்லன். தன் இழிதன்மையை அச்சமின்றிப் பொர முடியாத ஒருவனுக்குத் துறவெனும் கரடு முரடான குன்றேறுதல் இயலாத ஒன்றேயாகும்.

அவாவால் தூண்டப்பட்ட ஒருவன், இதையறிந்துகொள்ளவேண்டும். அவாவால் தூண்டு

பவனும், தூண்டப்பட்டவனும் அவனேதான். அவனுடைய பகைவர்கள் அனைவரும் அவனுள்ளத்தேயே உள்ளனர். வஞ்சனையுரைகள், பழிச்சொற்கள் ஆகியவையெல்லாம் அவன் இதுவரையில் வாழ்ந்துவந்த பேதைமை, தவறு எனும் மனப்பண்பிலிருந்து தோன்றுபவையே. இதை உணர்ந்து கொண்டபிறகு தீயனவொழித்து முழுவெற்றி காண்பது எளிது.

அவாவெழுச்சியின் தூண்டுதல்கள் மிகுந்த கொடுமையானதாக இருப்பின் அதற்காக ஒருவன் ஓலமிடுவது இழுக்கு. ஆனால், தன் வலிமை சோதிக்கப்படுகிறது, இயலாமை எடுத்துக் காட்டப்படுகிறது என்று இறும்பூதெய்த வேண்டும். ஏனெனின், இயலாமையை உண்மையாக உணர்ந்து ஒத்துக்கொள்ளுகிற ஒருவன், வலிமையடைதற்குரிய முயற்சியைத் தொடங்கக் காலந் தாழ்க்க மாட்டான்.

மதியற்ற மனிதர் தம் தவறுகளுக்கும், பிழைகளுக்கும் பிறரைத் தூற்றுவர். ஆனால், மெய்ம்மை விரும்புவோன் தன்னைத் தானே தூற்றிக்கொள்ள வேண்டும். தன் ஒழுக்கத்திற்குத் தானே முழுப் பொறுப்பாளி என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். தான் தவறுகிறபொழுது, இந்த நிலை—அப்பேர்ப்பட்ட சூழல் நிலை, அந்த மனிதன்—என்று கூறுதல் கூடாது. ஏனெனில், நன்மையோ, அன்றித் தீமையோ நாம் செய்தற்குரிய வாய்ப்பை வேண்டுமெனின் பிறர் பெருக்கித்தர முடியுமே தவிர,

நம்மை நல்லவராகவோ, அன்றித் தீயவராகவோ ஆக்கிவிடுதல் அவர்களுக்கு இயலாது.

முதன் முதலில் அவாவெழுச்சி கடுமையானதும் துன்பமானதுமாகும்; பின் மிக நுண்ணியதாகவும், நிலையான வைரியாகவும் மாறிவிடுகிறது. ஆனால், அவாவால் தூண்டப்படுவோன் உறுதியும் உள்ள உரம் படைத்தவனுமாக இருப்பின் சிறிது சிறிதாக அவ்வருட் பகைவனை அடக்கி, இறுதியில் நன்மையின் மேன்மையடைந்து மகிழ்வான்.

எவ்வித இடையூறும் மனிதனின் பேராசை தன்னலம், செருக்கு என்பவைகளின் கூட்டுச் சேர்க்கையே ஆகும். இவற்றை யொழித்துவிட்டால், தீயன அழிந்து வெற்றியொளியோடு நன்மை மிளிர்கிறது.

> "யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்." (குறள்: ௩௪௬)

'யான், எனது' என்று நினைக்கும் மயக்கத்தை அறுப்பவன் வானோர்க்கும் மேலாகிய இடத்தில் புகுவான்.

# ௪. மாறுகை - - -

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு." (குறள்: ௪௨௨)

பற்றெனும் நரகத்திற்கும் அமைதியெனும் வானுலகிற்கும் இடையில், மாறுகை எனும் ஆன்மப் பழி களையுமிடம் இருக்கிறது. இஃது இறந்தொழிந்த பின்பு எய்துவதாகக் கருதும் கற்பனை இடமல்ல; மனித உள்ளத்தில் உருவாகிற உண்மையான இடமாகும். காரியங்களைப் பகுத்துணர்தலும், அவற்றைப் புனிதப் படுத்தலும் இதன் பண்பு. இம் மாறுகை எனும் ஒளியினால் தவறெனும் உலோகம் தனித்துத் துண்டிக்கப்படுகிறது. எனவே, மெய்ம்மை எனும் ஆய்ந்தெடுத்த தங்கமே அங்கிருக்கும்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி." (குறள்: ௩௫௬)

இங்கு மெய்ப்பொருளைக் கற்றுத் தெளிந்தவர், திரும்பவும் இவ்விடத்து வராத வழியை அடைவர்.

அவாவெழுச்சி உச்சநிலையை அடையும்பொழுது துன்பமும் ஆழ்ந்த மனக்கலக்கமுமே அதன் விளைவுகளாகின்றன. எனவே, அவாவால் தூண்டப்பட்ட ஒருவன் அதனினின்றும் விடுதலை பெற பெருமுயற்சி செய்கிறான். உடனே, அவ் அடிமைத்தன்மை தன்னிடமே உள்ளதென்பதை

யும், புறச் சூழ்நிலைகளோடு போரிடுவதை ஒழித்து, அகநிலைகளையே மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதையும் அறிகிறான். தன் மனமேதான் அவா வெழுச்சியின் அடிப்படைக் காரணம் என்ற மெய்யறிவு பெறாத நிலையிலிருப்பதால், முதன் முதலில் புறப் பொருள்களோடு போர்புரிவது என்பது இயற்கையும், இன்றியமையாதது மாகும். ஆனால், சூழல்நிலைகளைப் பொருவதால் நமக்குச் சிறை நீக்கம் ஏற்பட்டுவிடுவதில்லை. ஒன்றுமட்டும் தெளிவாகப் புரிந்துவிடுகிறது. அஃதாவது, அவா வெழுச்சியின் பிறப்பிடம் மனமே என்பது தெள்ளிதின் விளங்குகிறது. அவாவெழுச்சியைப்பற்றிய இவ்வறிவு நம்மை மாறுகை எனும் நிலைக்குக் கொண்டு வருகிறது. இம் மாறுகை பிழையெனும் அடிமை வாழ்விலிருந்து நம்மை விடுவிக்கிறது.

குழந்தையின் வளர்ச்சிக்கு அழுவதும், காலுதைப்பதும் இன்றியமையாதன வாகும். இதே போன்று ஆன்ம வளர்ச்சியிலும் ஆரம்பப்போர் எனும் நிலை இன்றியமையாததாகவே இருக்கிறது. ஆனால், கைக்குழந்தைப் பருவத்தைக் கடந்துவிட்டால், அழுவதும் காலுதைப்பதும் தேவையற்றவை யாதலோடு, குழந்தை அவைகளை நிறுத்தி விடுதல் கண்கூடு. இதேபோன்று அவா வெழுச்சிக்குட்பட்டு இடறிவிழும் நிலைகளும் மன மாறுகை எனும் அறிவுநிலை அடைவதோடு நின்று விடுகிறது.

அவா வெழுச்சியின் காரணத்தையும், ஆரம் பத்தையும் வழுவறத் தெரிந்து கொள்கிறவன் புறப்பொருள்களோடு சண்டையிடுவதில்லை. அவனே உண்மையான அறிவாளியும்கூட. புறப் பொருள்களிடம் தான் கொண்டிருந்த பற்றுக்களை விட்டொழிக்கிருன். எனவே, அதன்பின்பு அவை ஆசையூட்டும் பொருள்களாகத் தோன்றுவதில்லை. எனினும் தூய்மையற்ற இவ் விச்சைகளை ஒழித்து விட்டதால் குறிக்கோளை அடைந்து விட்டோ மெனக் கருதமுடியாது. இருக்கிற நிலையை நெறிப் படுத்தற்கும், மாற்றியமைத்தற்கும் ஏற்ற ஒரு மனத்திண்மையின் ஆரம்பமே இது. இத் திறனைப் பொறுமையோடு பயன்படுத்தும்பொழுது, மனி தன் தூய, இருளகன்ற அருள்தெளிவென்னும் உச்சநிலையை அடைந்து விடுகிருன்.

பிற மக்களிடத்தும், பிறபொருள்களிடத்தும் தான் கொண்டுள்ள தன்னல மனப்பான்மையினை முழுக்க அழித்துவிடுவதே ஆன்ம மாறுகையைப் பெறும் வகையாகும். இம் மாறுகை முழுக்க முழுக்கப் புதுச் சூழ்நிலைகளையுண்டுபண்ணி விடுகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட இன்பத்திற் கெனவிருந்த இச்சை கைவிடப்பெற்றுவிட்டது; வேரோடு கிள்ளியெறியப்பட்டுவிட்டது; உள்ள உணர்வின்கண் அதற்குச் சிறிது இடம் கூடத் தரப்படவில்லை. ஆனுல், தன்னல இச்சையெனுந் தோற்றத்திலிருந்த உளவலிமை அழிக்கப்பட வில்லை. அவ் வலிமை சிந்தனையெனும் உயர்நிலைக்கு

இடமாற்றம் பெறுகிறது; தூய மனவுறுதியாக மாறுகிறது. பருப்பொருட்களைப்போல, மனதிலும் ஆற்றல்கூட்டு உண்டு. இதுவரையிலும் இழி திசைகளில் அடைந்துகிடந்த உள்ளஆற்றல் தற்பொழுது விடுவிக்கப்பட்டு அருட் செயல்கள் எனும் அருங் காரியங்களுக்குப் பயன்படுகிறது.

தெய்வீக வாழ்க்கையை நோக்கிச் செல்லுகிற புனிதப் பாதையின் நடுவழியில் அமைந்திருக்கிற மாறுகை எனும் இவ்விடம் தன்னலம் தவிர்க்கும் நாடு; துறவுலகம், பழம் பாசங்கள், பழைய இச்சைகள், பழைய பேராசைகள், வீணெண்ணங்கள் ஆகியவற்றை விட்டொழிப்பது இங்குத்தான். ஆனால், எழில் கொழிக்கும் இளமை மிக்க, என்றென்றும் நின்று நிலவிக் குறைவறுக்கும் தன்மையுடைய கருத்துக்களாக அவற்றைத் திரும்பப் பெறுதற்காகவே அவை கைவிடப்பட்டன. நெடுநாட்களாக விரும்பிப் பாதுகாத்துவந்த நகைகளைத் தீயிலிட்டு உருக்குகிறோம். ஆனால், புதிய, மிகச் சிறந்த அழகுப் பொருட்களாக அவை திரும்பவும் உருவாக்கப்படுகின்றன. அதே போன்று நெடுநாட் தொடர்புற்ற கருத்துக்களையும், பழக்கங்களையும் கைவிடுதற்கு முதன் முதலில் மனிதன் சிறிது பின்வாங்குகிறான். இறுதியில் அவற்றை விட்டொழிக்கிறான். ஆனால், சிலகாலம் பொறுத்து அவன் எல்லையற்ற மகிழ்வடைகிறான். ஏனெனின், தான் துறந்த அவையெலாம் புதுக் கருவிகளாக, அருந் திறன்களாக, தூய இன்பங்களாக அவனிடம்

திரும்ப வந்தமைகின்றன. அவை இப்போது அழ கொளி மிளிரும்படி மெருகிடப்பெற்ற ஆன்ம அணிகலன்களாகி விட்டன.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு." (குறள் : உகூஎ)

நெருப்பானது சுடச்சுட மாசற்று ஒளிமிகும் பொன்னைப் போல நோன்புமிக்காருக்குத் துன்ப மானது வருத்த வருத்தத் தீமை நீங்கி அறிவு மிகும் என்று பொய்யாமொழியார் விளக்கியதும் இதுவேயாகும்.

தீயனவற்றிலிருந்து நல்லனவற்றிற்குத் தன் னுள்ளத்தைத் திருப்புகிற ஒரு மனிதன் உண்மை யையும், வழுவையும் தெளிவாகப் பிரித்துணருகி றான். அவ்விதம் பிரித்துணருகிறபொழுது புறப் பொருட்களுடைய ஏவுதலுக்கும், தூண்டுதலுக்கும் அவன் உட்படுவதில்லை. பிறருடைய செயல்களை, பண்புகளைக் கண்டும் அவன் எளிதில் அசைந்து விடுவதில்லை. அவன் மெய்யறிவின் வழியே நின்றொழுகுவான்.

"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து." (குறள் : கங்சு)

ஒழுக்கம் தவறுதலால் குற்றத்தின்பால் படு வதை அறிந்த மனவலிமையுடையோர் நல்லொழுக் கத்தினின்றும் சுருங்கார். அத்தகைய மனிதன் முதன் முதலில் தன் வழுக்களை அறிந்துகொள்ளுகிறான். பிறகு ஆய்வு மனப்பாங்குடன் அடங்கிய நெஞ்சத்

தோடும் அவற்றை எதிர்க்கிருன், இறுதியில் கீழடக்கி வெற்றிகண்டு மாற்றி யமைக்கிருன்.

எவ்வளவு நுண்ணறிவோடும் ஊக்கத்தோடும் ஒருவன் ஒரு செயலைச் செய்து முடிக்கிருனே, அதுவே, அவனுற்ற துன்பத்தின் அளவுகோலாகிறது. இதுபோல, மாறுகையின் ஆரம்பநிலை சிறிது துன்பம் பயப்பதாகவே இருக்கும். ஆனல், அத் துன்பம் சுருங்கிய வாழ்வையுடையதுதான். ஏனெனின், விரைவில் அத்துன்பம் தூய ஆன்மக் களிப்பாக மாறிவிடுகிறது. இதையே வினைத் திட்ப விதியாக வள்ளுவர் வரைந்தனர்.

" துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை." (குறள் : சுசுக)

துன்பம் மிகுதியாக வருமாயினும் தளராமல் முடிவில் இன்பந்தரும் தொழிலைச் செய்யக்கடவர்.

தன் துன்பத்திற்குக் காரணம் பிறரும், சூழ்நிலையும் என்று கருதுகிற மனிதன் அதைவிட்டு அப்பாற் செல்லமாட்டான். ஆனல், அத் துன்பத்தின் காரணம் தன்னிடமேதானுளது என்பதையறிந்து கொள்கிறபொழுது அவன் அதைக் கடந்து சென்று இன்பத்தை யெய்துவான்.

பிறர் தன்பால் கொண்டிருக்கிற தவருன கருத்து என்று ஏதேனுமொன்றை முடிவுகட்டுகிருன். பின்பு அதனல் கலக்கமுற்றுப் புண்பட்டுத் தன்னையே நொந்துகொள்ளுகிருன். அவன் தெளிவு பெருத மனிதனேயாவான். அது பிறர்கொண்ட

கருத்தல்ல; தன்னைப்பற்றித் தானே கொண்டிருந்த தவருன கருத்து. ஆனால், இதையுணராது பிறர்களிடத்துத் தான் கண்ட குறைகளைத் தானும் அவர்களுக்குச் செய்கிருன். தான் செய்வது சரியெனவும் அவன் எண்ணுகிருன், ஆனால், அது தவருமெனப் பிறர்க்கு நன்கு தெரியும். பழி தூற்றலுக்குப் பழி தூற்றல், வெறுப்புக்கு வெறுப்பு, சினத்திற்குச் சினம் காட்டப்பட வேண்டுமென அவன் எண்ணுகிருன். தீமையினுடைய பண்பு இதுதான். தன்னலத்தோடு தன்னலம் மோதுகிற நிலைமை இது.

ஒருவனிடமுள்ள தன்னலத் தீமையே பிறன் ஒருவனிடமுள்ள தன்னலப் பண்புகளைத் தூண்டிவிட முடியும். ஆனால், அத்தீமை, மெய்ம்மை தெய்வீகப் பண்புகள் ஆகியவற்றை நெருங்க முடியாது. ஒரு சிறிதுகூட அவற்றை இடர்ப்படுத்தவோ, அன்றி இடம் பெயர்க்கவோ முடியாது.

தன்னலத்தை அப்படியே மெய்யன்பாக மாற்றுவதும் அதை நெறிப்படுத்துவதுமே மாறுகை எனும் நிலை. தன்னைப் புண்படுத்தவும், அடக்கியாளவும் பிறரிடமுள்ள தீப்பண்புகளுக்கு வலிமையுண்டு என்ற தவருன கருத்தைத் தெளிவுற்ற மனிதன் ஒழித்துவிடுகிருன். தான் அழிவுறுவது தன் தீவினைப் பயனே என்னும் ஆழ்ந்த உண்மையை உணர்ந்து கொள்கிருன். ஆகவே தானிழைக்கும் தவறுகளுக்கும், தனக்கு வந்துறுகிற இடையூறுகளுக்கும் பிறரைத் தூற்றும் செய்கையைக் கைவிட்டுவிடுகிருன். தன் நெஞ்சைத்

தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுகிறுன். இவ்விதமாகத் தன்னுள்ளப்பான்மையை மாற்றுகிற பொழுது இழிந்த தன்னலத் தன்மைகளையும் உயர்ந்த ஒழுக்கங்களாக மாற்றியமைக்கிறுன்.

> " தூஉய்மை என்பது அவாவின்மை; மற்றது
> வாஅய்மை வேண்ட வரும்." (குறள்: ௩௬௪)

தூய்மை என்பது அவாவில்லாமை; அவாவில்லாமையானது வாய்மையை விரும்பத் தானே வரும். பாசமெனும் மண்கலந்த உலோகப் பொருள் தியாகமென்னும் தீயிலிடப்படுகிறது. அதன் பயனுக உண்மைத் தனித் தங்கம் எடுக்கப்படுகிறது.

அவ்வகை மனிதன் பின்னும் புறப்பொருட்கள் வந்து தாக்கிய போதிலும், அவைகளுக்கு அசைந்து கொடாமல் உறுதியோடு இருக்கிறுன். அவன் தன் மனத்தை அடக்கியாளும் தலைவன்; அதற்கு அடிமையல்லன்; பற்றுக்களின் உருவகமாகத் தன்னைக் கருதிவந்தவன் தற்பொழுது தன்னை உண்மையின் உருவகமாகக் கொள்கிறுன். அவன் தீயனவற்றை அழித்து வெற்றிகண்டு விட்டான்.

> "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரு நோய்." (குறள்: ௩௫௯)

தான் சார்வனவற்றை அறிந்து அச்சார்பு அற ஒருவன் ஒழுகுவானுயின் அவனைச் சாரக் கூடிய துன்பங்கள் அவ்வறிவையும், ஒழுக்கத்தையும் அழித்துப் பின் சாரமாட்டாவாம் என்பதே குறள் மொழியும். அவன் உண்மை, வழு என்ற

இரண்டையும் நன்கறிவான். மறுவகற்றி உண்மையோடு தன்னைப் பொருத்திவிடுகிறான். அவனுக்குப் பிறர் தீங்கிழைப்பினும் அவன் நலமே செய்வான்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நல்நயம் செய்து விடல்." (குறள் : ௩௱௧௪)

தமக்குத் துன்பம் செய்தவர்களை வருத்துதலாவது அவர்கள் வெட்கும்படி இனிய இன்பம் தரும் செயல்களைப் பதிலுக்குச் செய்து அவ்விரண்டையும் மறத்தல் என்னும் வள்ளுவரின் இன்னா செய்யாமை நெறியில் நின்றொழுகுவான். எவ்வளவிற் கெவ்வளவு சூழல்நிலையிலிருந்து தீங்குகள் பெருகுகின்றனவோ அவ்வளவிற்கவ்வளவு தன்னிடம் அமைந்துள்ள நற்பண்பினை வெளிக்காட்டும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஒரு அறிஞனுக்கும், ஒரு மூடனுக்குமுள்ள வேறுபாடு இதுவே. மதியற்றவன் பாசத்தைப் பாசம் கொண்டே எதிர்க்கிறான், வெறுப்பை வெறுப்புக்கொண்டே எதிர்க்கிறான்; தீங்கிழைப்போர்க்குத் தானும் தீங்கிழைக்கிறான்; ஆனால், அறிஞனோ பாசத்தை அமைதியோடு தவிர்க்கிறான்; வெறுப்பை அன்பால் வெல்கிறான்; இன்னா செய்தார்க்கு அவர் நாண நன்னயம் செய்கிறான்.

"நண்பாற்றார் ஆகி நயம்இல செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை." (குறள் : ௯௯௮)

நட்புச் செய்யாதவராகிப் பகை செய்பவரிடத்தும் தாம் பண்புடையவராய் நடந்து கொள்ளாமை இழுக்காகும் என வள்ளுவர் வகுக்கும் அறிஞர் பண்பும் அதுவே.

தூய்மை பெறாத தன்மையில் உறையும் காரணமாக மக்கள் தங்கள் பால் துன்பத்தைத் தாங்களே வருவித்துக்கொள்ளுகின்றனர். அவர்கள் எத்துணையளவு உள்ளத்தைத் தூய்மைப்படுத்து கிறார்களோ அத்துணையளவு நிறைவான அமை தியைப் பெறலாம். மக்கள் இருளென்னும் பற்றுக் களை யடைதற்குச் செலவிடுகிற உளவலிமை, உயர்ந்த அறிவுநிலை யடைதற்குப் போதுமான தாகும். உள்ளம் நேர்பாதையில் திருப்பப்பட வேண்டும். நீர் கொதித்து ஆவியாக மாறும் பொழுது அது புதிய உருவத்தை யடைந்து உறுதி யானதும், எங்கும் பரவத் தகுந்ததுமான ஒரு சக்தி யாகி விடுகிறது. இதே போன்று தன்னலப் பண்பு நுண்ணறிவாற்றலாக, ஒழுக்கத் திண்மையாக மாற்றப்படும்பொழுது மனிதன் புதுவாழ்வெய்துவ துடன், செயற்கரிய செய்து முடித்தற்குரிய புது வலிமையையும் பெறுகிறான்.

பருப்பொருட்களுக்கு இருப்பதுபோன்று, உள் ளச் சக்திகளுக்கும் அதனதன் எதிர்த்துருவங்கள் உண்டு. எதிர்மறைத் துருவம் உள்ள இடமெல் லாம் மறைத்துருவமும் உண்டு. பேதைமையிருக்கு மிடத்தில் அறிவும் ஏற்பட இடமுண்டு; பாசத் தால் கட்டுண்ட நிலையிருப்பின் அமைதியும் காத் துக்கொண் டிருக்கிறது. அளவு கடந்த துன்பம் இருக்குமெனின், இன்பமும் அருகிலேயே இருக் கிறது. இன்பத்தின் எதிர்மறையே துன்பம். தூய்மையின் எதிர்மறையே பற்று. நன்மையை

மறுத்தலே தீமை. ஆகவே, இங்கு இன்றியமை யாத காரியம் ஒன்றே ஒன்றுதான். அஃதாவது எதிர்மறையிலிருந்து மறைக்குத் திரும்பி விடுவதே யாகும். தூய்மையற்ற இச்சைகளிலிருந்து தூய்மை நிறைந்த உயர்வு நாட்டங்களுக்கு உள்ளத்தைத் திருப்பியாக வேண்டும். பற்றின் விசைகளை ஒழுக் கப் பண்புகளாக மாற்றியமைக்க வேண்டும்.

“ பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் ; தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.” (குறள் : கஉ)

வருந்திப் போற்றி ஒழுக்கத்தைக் காக்கக் கடவன்; எல்லா அறங்களும் தெரிந்து ஆராய்ந்து மனதை அடக்கி அறியினும் துணை அதுவே.

அறிஞர் தம் கருத்துக்களைத் தூய்மைப்படுத்து கின்றனர். தீவினை யொழித்து நல்வினை செய்வர். தவறுகளைப் பின்னொதுக்கி உண்மையை அடைய முயலுவர். எனவே, அவர்கள் பற்றுக் கவர்ச்சிகள் அவா வெழுச்சியின் இடையூறுகள், துன்பமெனும் இருளுலகு இவற்றினின்றும் மேன்மையுற்று, தெய்வீக மனப்பண்பும், சிறந்த வாழ்வும் பெறு கின்றனர்.

“ துணை நலம் ஆக்கம் தரூஉம் ; வினை நலம்
வேண்டிய எல்லாம் தரும்.” (குறள் : சுருக)

ஒருவனுக்குத் துணைவர்களது நன்மை செல் வத்தை மட்டும் கொடுக்கும் ; ஆனால், தூய வினை யினது நன்மை அவன் விரும்பும் எல்லாவற்றை யும் கொடுக்கும்.

---

## ரு. மீ உயர்வு - - -

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு." (குறள்: உஉ)

அவா வெழுச்சியெனும் இருள் நிலையிலிருந்து ஒளிபெற்ற மாறுகை எனும் நிலையெய்திவிடும் போது ஒருவன் அறிஞனாகி விடுகிறான். அஃதாவது தன் தூய்மையின் இன்றியமையாமையை உணருகிறான். தன்னைத் தூய்மைப்படுத்தும் வகையினைப் புரிந்துகொள்கின்றான். நெறியைத் தெரிந்த பின்பு செயல்வகை தொடங்குகிறான். தீயன குறைத்து நல்லன பெருக்கும் பொழுது உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி-புத்தறிவு உண்டாகிறது. அவன் ஒரு புது மனிதனாகிவிடுகிறான். இதை யடையும்பொழுது அவன் அறிஞனிலிருந்து முனிவனாக மாறிவிடுகிறான். மனித வாழ்வினின்றும் அவன் தெய்வீக வாழ்வெய்துகிறான். இவ்வுலகில் அஃது ஒரு மறு பிறப்பை ஒத்ததாகும். அவனுக்கென ஒரு புதிய சூழ்நிலை யமைந்து விடுகிறது. ஒரு புதுவலிமை பெற்றியங்குகிறான். அவன் அகக்கண் முன் ஒரு புதுக் கருத்துலகம் உருவாகிறது. இதுதான் இம் மீ உயர்வு நிலை. இதையே உன்னதமான வாழ்வென நான் கருதுகிறேன்.

பாவத்தைப் பற்றிய எண்ணம் ஒரு சிறிதுமில்லாது ஒழிய வேண்டும். ஆசை, ஐயம், துயரம்

இன்னல் ஆகியவைகளனைத்தும் முடிவுபெறவேண்டும். காமம், பகை, சினம், பொறுமை ஆகியவற்றிற்குக் கருத்திலே இடமில்லாமல் செய்யவேண்டும். துன்பம் போக்கும் முறையாக வள்ளுவர் இதனையே கூறினர்.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்." (குறள் : ந௬0)

விழைவு, வெகுளி, மயக்கம் என்னும் இம் மூன்றினது பெயரும் கெட்ட உடனே துன்பங்கள் போகும் என்பதே குறள் வகுத்த மெய்யுணர்வு விதியாகும். தன் நிலைக்குக் காரணம் பிறரெனக் கூறி, பிறரைப் பழிக்குந் தன்மையின் நினைவுகூட உள்ளத்தில் இல்லாமலாக்கவேண்டும். ஒருவன் தன் இடர்ப்பாடுகளுக்கெல்லாம் காரணம் தன்னகத்தேயேயுளது என்பதையுணர்ந்து, படிப்படியாக உயர்வுபெற்று வழுவில்லா உள்ளம் பெற வேண்டும். இன்னோரன்ன எல்லா நிலைகளும் பொருந்துகிறபொழுது ஒருவன் மீ உயர்வு பெறுகிறான். குறுகிய மனித வாழ்வைக் கடந்து தெய்வீக வாழ்வைக் காணுகிறான். தீமை, மீ உயர்வாக மாறிவிடுகிறது. முழுக்க முழுக்க அவன் வாழ்வு நன்மையின் உருவகமே.

தெய்வீக மனப்பண்பு சாதாரண மனித மனப்பண்பினின்றும் மாறுபட்டதாகும். அஃது ஒரு புதுவகையான மனப்பண்பு. இது மனிதப்பண்பினின்று பிறப்பதே எனினும் அதன் தொடர்ச்சியல்ல. வித்தினின்றும் முளைக்கிற செடியில்தான்

மலர் பூக்கிறது. எனினும் அது வித்தினின்றும் வேறுபட்டதாக இருக்கிறது. அதே போன்று பாவமும், துன்பமும் நிறைந்த வாழ்வில் பிறந்து, ஒரு குறிப்பிட்ட காலம் அதிற்கிடந்து உழன்று, பின்பே அவ் வாழ்வினின்றும் மீ உயர்வு பெற முடியும். இம் மேம்பட்ட வாழ்வில் முன்னைய வாழ்வின் தன்மை ஒரு சிறிதுகூட இருக்காது.

பாசம் தன்னலக் கருவியாக இருப்பதுபோல, தெளிவு மேம்பட்டவாழ்வின் கருவியாக இருக்கிறது. இம் மீஉயர்வு நிலையை மனிதன் அடைந்து விட்டால், அவன் இசைவின்மைக்கும், இடையூறுகட்கும் அப்பாற்பட்டவனுகிவிடுகிருன். நிறைவான நன்மையை மனிதன் அறிந்துணர வேண்டும். அதனை வெறும் எண்ணமாகவோ, கற்பனையாகவோ கொள்ளாது தன் உரிமைச் சொத்தாகக் கருதி வாழ்வில் நுகர்ந்தறிய வேண்டும். உடனே அவனுக்கு ஓர் அமைதியான நோக்கு ஏற்படுகிறது. பல்வகை மாறுபாடுகளிலும் அமைவுற்ற மகிழ்வையே பெறுகிருன்.

இம் மீ உயர்வு பற்ருல் ஆளப்படுவதல்ல; விதிகளால் ஆளப்படுவது. இவ் வாழ்வு நிலையற்ற எண்ணங்கள்மீது எழுப்பப்படவில்லை; நிலைபெறும் விதிகளின்மீதாகும். அதன் தெளிவான சூழல் நிலையில் எல்லாக் காரியங்களுடைய தோற்றக் காரணங்களையும் உணரமுடியும். எனவே, அங்குத் துன்பத்திற்கு, ஆசைக்கு, மன நோய்க்கு இடமேயில்லை.

மக்கள் தன்னலம் என்னும் தன்மைக்குட்பட்டவர்களாக இருக்கும் பொழுது, தாங்கள் மிகுந்த பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதோடு பல்வேறுபட்ட காரியங்களைப்பற்றிய கவலையும் கொள்கிறார்கள். ஆனால், இதையெலாம் விட்டு, தங்களின் துன்பந் தோய்ந்த தன்மையைப்பற்றிக் கடுகளவு கூடக் கவலைப்படுவதில்லை. நிலையற்ற இன்பங்களுக்காகப் பேராசை கொள்கிற அவர்கள், தங்களின் பாதுகாப்பிற்காகவோ அன்றி நீடித்த வாழ்விற்காகவோ சிறிதும் கவலுவதில்லை. ஆனால், அறிவும், நன்மையும் நிரம்பிய மீஉயர்வு நிலையில் மேற்கூறிய அனைத்தும் மேன்மையுற்றுவிட்டன. தன்மை விருப்பங்கள் இருந்த இடத்தில் தற்பொழுது பொதுநோக்கங்கள் நிரம்பிவிட்டன. தன்னல இன்பத்தை நாடுவதால் ஏற்பட்ட பொறுப்புக்கள், இன்னல்கள், பேராசைகள் அனைத்தும் ஓரிரவில் காணும் கனவுபோல அழிக்கப்பட்டுவிட்டன.

பற்று குருடானதும், பேதைமையானதுமாகும். ஆசைப்பொருளை அடைவதே அதன் குறியும் கொள்கையும். தன்னலம் எந்த சட்ட வரம்பையும் காணுவதில்லை. விரும்பிய பொருளையடைந்து அதை நுகர்ந்து மகிழ வேண்டுமென்பது தான் தன்னலத்தின் குறிக்கோள். அவ் விருப்பப் பொருட்கள் உலகில் பல தரத்தில் உள்ளன. காம இச்சையிலிருந்து, எண்ணிறந்த பகட்டுகள்வரை எத்துணையோ உள்ளன. அதில் திளைத்து, அதைத் தனக்கென அமைந்த விண்ணுலகாகக் கொண்டு

அவற்றை என்றுமழியா இன்பமாகக் கருதுகிருன். ஆனுல், அனைத்தும் தன்மை விருப்பமேயாகும். அதே காம இச்சைதான் பலவித நுண்ணிய ஏமாற் றத்தோற்றங்களி லுறைகிறது. அனைத்தும் தன்னல மகிழ்ச்சி விழைவுகளே. அவ்வகை மகிழ்ச்சிகளை இழந்துவிடலாகாதே எனும் பயத்துடன்கூடியே அவற்றின்பாலுள்ள நாட்டமும் இருக்கிறது.

மீஉயர்வு நிலையில் பற்றும், பயமும் முடிவுற்று விடுகிறது. அடையவேண்டும் என்ற அவாவும், இழக்க வேண்டுமே என்ற பயமும் அங்கிருப்ப தில்லை. ஏனெனின் நன்மைதான் இயற்கையின் விதி. எனவே, நன்மையே என்றுமழியா இன்பம் எனும்பொழுது இச்சைக்கு இடமேது ? இவ் விளு வையே வள்ளுவரும் வினவிஞர்.

"மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் ? பிறப்பறுக்கல்
உற்ருர்க் குடம்பு மிகை." (குறள் : ௩௪௫)

தீய ஒழுக்கங்களின் தோற்றுவாய்களை அகற்ற லுற்ருர்க்கு உடம்பு ஒன்றே மிகையாகும் ; அதற்கு மேலும் பற்றுதற்கு உரிய கருவிகள் எவையோ ?

தன் முழுத்தன்மையையும் இயற்கையின் விதி களோ டியைந்ததாக பொருத்துபவன், தன் கருத் துக்களைத் தூய்மைப் படுத்துபவன், வழுவற்ற செயல்களைச் செய்பவன், உண்மையான விடுதலை யடைந்தவன் ஆவன். அவனே இருளிலிருந்தும் நிலையாமையிலிருந்தும் மேம்பட்ட வாழ்வெய்துபவ னும் ஆவன். அவனே ஒளிபெற்று என்றென்றும்

அழியா நிலை பெறுபவன். ஏனெனின், முதன் முதலில் இம் மேம்பட்ட நிலை ஓர் உயர்ந்த ஒழுக்க முறைமையாக இருக்கிறது. பிறகு புதுவகையான புலனுணர்வாகத் தோற்றுகிறது. இறுதியில் உலகெங்குமுள்ள ஒழுக்கக் காரணத் தன்மையைத் தெளிவுபட நன்கு புரிந்துகொள்ளும் முயற்சியாகி விடுகிறது. எனவே, இவ் வொழுக்கம், இந் நோக்கம், இவ் வறிவுதான் புது மனப்பண்பையும், தெய்வீக வாழ்வையும் உருவாக்குகிறது. தன்னல ஆட்சிக்குட்படாது அதினின்றும் அப்பாற்பட்டுயர்ந்தவனே மேம்பட்ட மனிதனுவான். அவன் தீமையை வென்று நன்மையைக் கற்றுணர்ந்தும் அதைக் கடைப்பிடித் தொழுகியும் வாழ்கிறான். நெடுநாட்களாகக் கண்ணிழந்து வாழ்ந்த ஒருவன், திடீரெனத் தன் கண்ணொளியைத் திரும்பப்பெற்றுப் பொருட்களை அவை இருப்பனபோல அப்படியே காணுந் தன்மை பெற்று விடுவதைப் போலவே, மீஉயர்வு பெற்ற மனிதனின் நிலையுமாகும்.

தீமை ஓர் ஆற்றலல்ல; அஃது ஓர் அனுபவமாகும். உலகத்தில் தீமைக்கு ஒரு தனியாற்றல் உண்டெனின், அதை எம் மனிதனும் வெல்லுதல் இயலாது. ஆனால், தீமைக்கு உண்மையான ஆற்றல் இல்லாதிருப்பினும் அஃது உண்மையான அனுபவ நிலையாகும்; பாடாகும். அனுபவங்கள் அனைத்தும் ஓரளவு உண்மைத் தன்மை உடைத்தாயிருக்கிறது எனும் கருத்து பேதைமையாகும்; முன்

னேற்றமின்மையின் அறிகுறியே அது. சிறுகச் சிறுகக் கல்வியைப் பெருக்கிக் கொண்டவுடன் குழந்தையின் பேதைமை மறைந்துவிடுவது இயற்கை. ஒளி பெருகப் பெருக இருள் மறைந்து விடுவதும் இயற்கை. அதுபோல, அறிவொளியின் முன் தீமை பேதைமையாகிய பின்னிட்டு மறைந்து விடுகின்றது.

நன்மையின் இன்பப்பாடுகள் மன உணர்வைப் புகுந்து பற்றிக்கொள்ளும்பொழுது, தீமையின் துன்பப் பாடுகள் மறைந்துவிடுகின்றன. இவ்வின்பப் பாடுகள் யாவை எனப் பார்க்கின் அவை அளவிடற் கரியதாகவும், அழகு நிறைந்ததாகவும் இருக்கின்றன. பாவத்திலிருந்து விடுதலை பெற்று விட்டோம் என்னும் மகிழ்வுநிறைந்த அறிவு; கழிந்ததெண்ணிக் கலங்கும் நிலையில்லாமை; அவா எழுச்சியின் வதையிலிருந்து மீட்சி; முன்பு மீளாத்துயர் தந்த அதே சூழ்நிலைகளில் தற்பொழுது சொல்லொணு மகிழ்வடைதல்; மிகுந்த பொறுமையும், இனிமையான தற்பண்பும் கொண்டிருத்தல்: எல்லாச் சூழ்நிலைகளிலும் அமைதியான மனம் பெற்றிருத்தல்; ஐயம், அச்சம், ஆசை ஆகியவற்றிலிருந்து சிறை நீங்கல்; வெறுப்பு, பொருமை, பகை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுதல்; பகைவர்களாகவும் கயவர்களாகவும் கருதப்பட வேண்டியவர்களிடத்தும்கூட அன்பாகப் பேசுவதற்கும் பழகுவதற்கும், ஏற்ற ஓர் ஆற்றலைப் பெறுதல்; தூற்றுபவர்களை வாழ்த்துதற்குரிய

தெய்வீக ஆற்றலைப்பெறுதல்; மனித மனத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவையும், அவ்வுள்ளத்தின் ஆதாரமாகிய நற்பண்பையும் உணர்ந்துகொள்ளல்; இயற்கை ஒழுங்கமைப்பு முறையின் காரணத்தன்மையையும் மனிதரின் மனத் தோற்றத்தையும் பற்றிய அறிவுபெறல்; மனித இனத்திற்கெனவுள்ள சிறந்த நற்பண்பை முன்னமே யறிதல்; இதையெல்லாம்விடச் சிறப்பாகத் தீமையின் எல்லையையும், அதன் இயலாமையையும், என்றென்றும் நின்று நிலவும் நற்பண்பின் முதன்மையும் ஆற்றலையும் கண்டு களிபேருவகை யெய்துதல்; இவையும் இன்னோரன்ன தெளிந்த, வலுவுள்ள, நீடித்த வாழ்வுமே மேம்பட்ட மனிதனின் இன்பப் பாடுகள். மேலும் இவற்றோடு, இப் புதிய உளப்பண்பில் எண்ணிறந்த ஆதரவுகளும், அளவிலா ஆற்றல்களும், உயர்வான திறமைகளும், பெரும் வல்லமைகளும் அம் மேம்பட்ட மனிதன் பெறுகிறான்.

மீஉயர்வு என்பது மேம்பட்ட அறமேயாகும். தீமையும், நன்மையும் ஒருங்குறுதல் இயலாது. எனவே, நன்மையை உணர்ந்து அதைப் பற்றுதற்கு முன்பாகத் தீமையைத் தவிர்த்தொழித்து வெற்றி கண்டாகவேண்டும்.

“தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.” (குறள்: ௨௦௨)

தீச் செயல்கள் தீமை தருவதனால், அத் தீச் செயல்கள் நெருப்பினும் அதிகமாகப் பெரியோரால் அஞ்சப்படும். நற்பண்பைப் பழகி முழுக்க முழுக்க

அதன்வழி யொழுகும் நிலை யடைந்துவிட்டால், மனதிலுள்ள துயரங்கள் அனைத்தும் மறைந்து விடும். ஏனெனின், தீயபண்பைத் தொடர்ந்து உறைகிற இன்னலும், இடுக்கணும் நற்பண்பைத் தொடர முடியாது. நற்பண்புடைய மனிதன் எது நேரினும் கலங்கவோ அன்றித் துயருறவோ மாட்டான். அந் நிகழ்ச்சியின் தோற்றக் காரணத்தையும், அதன் விளைவுகளையும் அவன் நன்கறிவான். தன்னிடத்து நற்பண்பை உண்டுபண்ணுவதற்காகவே அந் நிகழ்ச்சி தோன்றியிருக்கிறது என்பதையும் நன்கறிவான். எனவே, அவன் மகிழ்வுடனும், அமைதியுடனுமிருக்கிறான். நற்பண்புடையவனின் உடல் ஓர் எல்லைக்குட்பட்டிருப்பினும், அவனுடைய மனதிற்கு வரம்புகள் கிடையாது. ஒருவேளை அவன், உடல் காயமுற்றுத் துன்புறலாம் ஆனால், அவனுள்ளத்து இன்பமும், அமைதியும் குடியிருக்கின்றன.

மெய்விளக்க ஆசிரியர் ஒருவருக்கு ஏற்ற, முன்னேக்குள்ள ஒரு மாணவன் இருந்தான். பல ஆண்டுகள் கற்ற பின்பு அம் மாணவன் ஒரு நாள் ஆசிரியரிடம் ஒரு வினா வினவினான். அஃது ஆசிரியர் விடையிறுக்க முடியாத வினாவாக இருந்தது. பல நாட்கள் ஆழ்ந்து சிந்தனை செய்த பிறகு ஆசிரியர் அம்மாணவனிடம், "நீ வினவிய வினாவிற்கு நான் விடை கூறுதல் இயலாது. அதற்கு உன்னால் விடையளிக்க முடியுமா?" என்று கேட்டார். உடனே அம்மாணவன் தான் வினவிய வினாவிற்குத்

தானே விடை கூறினான். ஆசிரியர் அவனை யணைத்து, "என்னால் இயலாததை நீ செய்து முடித்தாய். நான் மட்டுமன்றி யாருமே உனக்குக் கற்பித்தற்குகந்தவரல்லர். ஏனெனின், நீ மெய்யறிவு நிரம்பியவனாகி விட்டாய். மற்றப் பறவைகளைக் காட்டிலும் அதிக உயரத்தில் பறக்கிற அரச கழுகைப் போன்று பிறர் பின்தொடர முடியாத உயர்வான நிலையெய்திவிட்டாய். பிறர்க்குக் கற்பித்தலே இனி உன் பணி, இனி நீ மாணவனல்லன்; வல்லுனனாகி விட்டாய்" என்றுரைத்தார். (மெய்யறிவு—தத்துவ உணர்வு.)

தற்பொழுது மீஉயர்வு பெற்ற ஒருவன் தன் முன்னைய தன்னல வாழ்வை எண்ணிப் பார்க்குங்கால் அதிற் பொதிந்துள்ள ஓர் உண்மை விளங்கும். அவ்வாழ்வின் இடுக்கண்களெல்லாம் தன் பள்ளியாசிரியர் தனக்குக் கற்றுத் தந்தவையே என்பதையும், அவற்றின் பொருட்களைச் சரிவர உணர்ந்து தன்னைத் தான் உயர்த்திக் கொண்டமையாலேயே அவ்விடுக்கண்கள் தன்னை விட்டு நீங்கின என்பதையும் அறிந்துகொள்கின்றான். இனி அவனுக்குக் கல்வி தேவையில்லை எனும் நிலை வரவே, ஆசிரியர்கள் அவன் ஒரு வல்லுனனாகிவிடுவதைக் காணுகின்றனர். ஏனெனின், சிறிது அறிவு பெற்றவர் மிகுந்த அறிவு படைத்தோருக்குக் கற்பித்தல் இயலாது; பேதை அறிஞனுக்குக் கல்வியூட்டுதல் இயலாது; தீமை நன்மையைப் பெருக்க முடியாது; மாணவன் ஆசிரியருக்குக் கல்விப் பாடங்கள் திட்

டம் செய்துதர முடியாது. தீவினைக்கு முதன்மை தரப்படும் இடத்திலேயே தீமையைக் கற்பிக்க முடியும். நற்பண்பெனும் நாட்டில் தீமைக்கு இடமோ, உரிமையோ கிடையா.

மெய்யெனும் பெருவழி செல்லும் வழிப்போக்கன் தீப்பண்பு கண்டு பணிவதில்லை. நற்பண்பிற்குத் தாள் பணிதலையே அவன் அறிவான். "பாவத்தைத் தவிர்க்க முடியாது. தீப்பண்பு இருந்தே தீரும்," என்றுரைப்பவன், தான் தீப்பண்புடையவனென்பதையும், தீப்பண்பே அவனை ஆளும் தலைவனாக இருக்கிறதென்பதையும் அவ்வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறான். தீப்பண்பு தன்னைத் துன்பத்தோடு பிணைக்கும் கருவி என்பதை அவன் உணர்ந்துகொள்ளவில்லை. நற்பண்பை நாடும் ஒருவன், தீப்பண்பையும் விரும்புகிறவனாக இருக்க முடியாது. தீப் பண்பு பெருகுவதை அவன் அனுமதிக்கமாட்டான். அவன் ஏற்றி இறைஞ்சுவதெல்லாம் நற்பண்பே அன்றி தீப்பண்பல்ல. அவன் விரும்புவது ஒளியன்றி இருளல்ல. ஒருவன் மெய்ம்மையைத் தன் தலைமையாகக்கொள்கிறபொழுது வழுவை அழித்தொழிக்கிறான் என்பதுதான் பொருள். வழுவையொழித்து அவன் மேம்படும் பொழுது மெய்ம்மையோடு ஒன்றிவிடுகிறான். தன் செயல்களில் மெய்ம்மையின் தன்மை எதிரொளிரும்படி வாழ்கிறான்.

" உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால் ; வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு." (குறள் : ௬௯௩)

உறுப்புக்களில் ஒத்திருத்தல் நன் மக்களுடன் ஒப்பாகாது; பொருந்துவதாகும் ஒப்பாவது நெருங் கத்தக்க பண்புடைமையால் ஒத்திருத்தல்.

மீஉயர்வு ஒரு பிறழ்வான நிலையல்ல. ஒழுங்கு முறைக்குட்பட்ட வளர்ச்சியின் ஒரு பகுதியே. இதுகாறும் அந்நிலையெய்தியவர் ஒரு சிலரேயெனி னும், வருங்கால மக்கள் அனைவரும் அந்நிலை யெய்துவர் என்பது முடிபு. இவ்விதமான மனித இன உயர்வு நம்பிக்கையை வள்ளுவரும் வலிந்து கூறியுள்ளனர்.

> "பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்." (குறள் : ௯௯௬)

பண்புடையவரிடத்தில் படுதலால் உலக இயல் என்றும் உள்ளதாகின்றது; அது இல்லையேல் மண்ணில் புகுந்து மாய்ந்து போய் விடும். எனவே, மீஉயர்வு நிலையெய்தியவனுக்குப் பாவமில்லை; துன்பமில்லை; இடுக்கண் வந்துறுவ தில்லை. அவன் நல்லெண்ண நற்செய்கைகள் உடையவனுகிருன். நற்பண்பே அவனுடைய அமைதியான ஒழுக்கமாகிவிடுகிறது. தன்னலத்தை வெறுத்துத் தன்னை மெய்ம்மையிடம் ஒப்படைத்து விடுகிருன். தீப்பண்பை அடக்கி நற்பண்பிற்கு முடிசூடுகிருன். அவனுக்கு மக்களோ, அன்றி நூற்களோ கல்வி புகட்ட முடியாது. ஏனெனின், சிறந்த நற்பண்பால், மெய்யருளால் அவன் கற்பிக்கப்பட்டுவிட்டான்.

---

## ௲. பேரின்பம் - - -

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த; புகழும் இல." (குறள்: ௩௯)

தெய்வீக நற்பண்பைக் கடைப்பிடித்தொழுகின் வாழ்வு இன்ப வளமாக இருக்கும். நற்பண்புடைய மனிதனின் சாதாரண நிலை இன்ப நிலையேயாகும். புறப்பொருள்களின் தாக்குதல்கள், தொல்லைகள், இக்கட்டுகள் பிறர்க்குத் துன்பம் விளைப்பனவெனினும், நற்பண்புடைய மனிதன் மகிழ்வையே அவை பெருக்குகிறது. எவ்வாறெனின், அவை தன்னிடமுள்ள நற்பண்பெனும் ஆழமான ஊற்றைப் பெரிதாக்கும் வாய்ப்பை அளிக்கின்றன.

மேம்பாடுற்ற அறமென்பது, மேம்பாடுற்ற இன்பத்தைச் சுவைப்பதேயாகும். பேரின்ப அறம் படைத்தோர்க்கே, பேரின்ப அருள் கிடைக்கும். தயை, உளத்தூய்மை, அமைதி விருப்பு என்பன யாவும் பேரின்ப அறத்தின் பாற்படும். உயர்ந்த அறமாவது இன்பத்தின் வழிகாட்டியல்ல; இன்பமேயாகும். மேம்பட்ட அறமுடையோர் மகிழ்வற்றிருக்க முடியாது. மகிழ்வற்ற நிலை தன்னலத் தன்மைகளில் இருக்குமேயன்றித் தன் தியாகப் பண்புகளில் இருக்காது. ஒரு மனிதன் அறம்

நிறைந்தவனாக இருக்கலாம். ஆனால், அவன் மகிழ்வற்றவனாகவும் இருக்கலாம். அவன் மெய்யறம் கொண்டவனல்லன் என்பதையே அஃது உணர்த்துகிறது. ஏனெனின், மெய்யறம் உள்ளவர்களை மகிழ்வற்ற நிலை அணுக முடியாது. அறம் தன்னலத்தோடு கலந்திருந்தால் அங்குத் துன்பமும் சாருகிறது. ஆனால், மெய்யறத்தில் தன்னலக் களங்கம் புனிதப்படுகிறது, எனவே, அங்கு இம்மியளவுகூட இன்னலிருப்பதில்லை. ஓர் உதாரணத்தால் இதை நன்கு உணரலாம். ஒருவனிடம் பிறரைத் தாக்கவும் தன்னைப் பாதுகாக்கவும் சிங்கத்தையொத்த வலுவிருக்கலாம், இவ்வலிமையை அறத்தின் பயனாகக் கருதினும் அவன் நிறைந்த மகிழ்வடைந்துவிட மாட்டான். ஆனால், எதிர்மாறாக, தாக்குதல்களைச் சகித்துப் பொறுமையுடனிருந்து, தாக்குதலின் போதும் அமைதியோடும் அன்போடும் நடந்து கொள்கின்ற மெய்யறிவு படைத்த ஒருவனுடைய வலிமையானது அவனுக்கு நிறைந்த இன்பத்தைத் தருகிறது. மேலும், தாக்குவோனுக்கும் இதே இன்பத்தைக் கொடுக்கிறது. எவ்வாறெனின், இவனுடைய நற்பண்பைக் காணுகிற அவன் தன்னுடைய கொடுமைகளையும், தீப்பண்புகளையும் விட்டொழிக்கத் தூண்டப்படுகிறான்.

அறம் நிறைந்திருத்தல் மெய்ம்மை அடையும் ஒரு பெரிய படியேறுதலை ஒத்தது. தனக்கென ஒரு விண்ணுலகைப் பெறவோ, அன்றித் தான் இறவா வரம் பெறவேண்டுமென்பதற்காகவோ

நன்மையைச் செய்தல் மனித அறமென அழைக்கப் படும். இவ் வறம் தன்னலந் தவிர்ந்ததும் துன்பம் நீங்கியதுமல்ல. ஆனால், மேம்பட்ட அறங்கள் அனைத்தும் நற்பண்பின்பாற்படும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற." (குறள்: ௩௪)

அறம் புரிவோன் தன் நெஞ்சில் குற்றமில்லாத வனாகக் கடவன்; அவ்வளவே அறம் என்பது; மற்றவை அனைத்தும் பிறர் அறிவதற்காகச் செய் யும் வீண் செயல்களே. ஆங்குத் தன்னலக் குறிக்கோ ளொன்றும் இல்லை. மனித அறம் நிறைவற்றது; தன் னல, இழி தன்மைகளோடு கலந்துள்ளது. அவை மாற்றப்பட்டாக வேண்டும். மெய்யறம் களங்க மற்றது, தூய்மையானது. இது நிறைவுற்றது.

இன்பம் கொழிக்கும் மேம்பாடுற்ற அறங்கள் யாவை எனப் பார்க்கின், அவை பின் வருமாறு:

**நடுவுநிலைமை:** மனித உள்ளத்தையும், மனிதச் செயல்களையும் நன்கு உற்றுப் பார்க்கும்பொழுது, ஒருவனுக்கு எதிராக மற்றொருவனுடனோ, அன்றி ஒரு கட்சிக்கு எதிராத மற்றொரு கட்சியுடனோ சார்தலென்பது முடியாத காரியமாக இருக்கிறது. எனவே, நிறைவான நீதியோடிருத்தற்குரிய ஆற்றல் வேண்டும். அதுவே நடுவுநிலைமையாம்.

"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி." (குறள்: ௧௧௮)

நிறுப்பதற்கு முன்பு தன்னைச் சமமாகச் செய்து கொண்டு பின் தன்னிடத்தே வைத்த பொருளை அளவு செய்யும் துலாம்போல, ஒரு பக்கமாகப் பொருந்திச் சாயாமையே அறிவு நிறைந்தோர்க்கு அழகு.

**அளவிறந்த கருணை :** எல்லா மக்களிடத்தும், எல்லா உயிர்ப் பிராணிகளிடத்தும், பகைவர்களிடத்தும், நண்பர்களிடத்தும் கருணையோடிருத்தலே அளவிறந்த கருணையாம்.

**"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."** (குறள் : ௩௨௨)

உணவைப் பங்கிட்டுக் கொடுத்துப் பிறகு தானும் உண்டு பல உயிர்களைக் காத்தல், நூலறிந்தோர் திரட்டிய அறங்களிலெல்லாம் தலையாகிய அறமாகும்.

**நிறை பொறுமை :** எப்பொழுதும், எச் சூழ்நிலைகளிலும், மிகக் கடினமான நேரங்களில்கூட பொறுமையோடிருத்தல் நிறைபொறுமை எனப்படும்.

**"நிறை உடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை**
**போற்றி ஒழுகப் படும்."** (குறள் : ௧௫௪)

ஒருவன் நிறையுடைமை தன்னைவிட்டு நீங்காமையை விரும்பின், அவன் பொறுமையை உடையவனாயிருத்தலைக் காத்து ஒழுகவேண்டும்.

**ஆழ்ந்த அடக்கம் :** இது முழுத் தன்னலத் தவிர்ப்பு ஆகும். தன் செயல்களையும் பிறிதொருவ

னுடையதாகக் கொண்டு தனக்குத்தானே சரியான நீதி வழங்குதலாகும்.

"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்." (குறள் : கஉஉ)

அடங்குதலே அறிவு என்பதை அறிந்து நல்வழியினுல் ஒருவன் அடங்கப்பெற்ருல், அவனது அடக்கம் பெரியோரால் அறியப்பெற்று மேம்பாடளிக்கும்.

**மாசற்ற தூய்மை:** இது மனதிலும், செயலிலும் மாசற்ற தூய்மையோடிருத்தல்; எல்லாத் தீக்கருத்துக்களினின்றும் தூய்மையற்ற கற்பனைகளி லிருந்தும் விலகுதலேயாகும்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்." (குறள் : உகூச)

தன் நெஞ்சினுல் ஒருவன் பொய்யாது நடக்கின் அவன் எல்லா உயர்ந்தோரது உள்ளத்திலும் உளனுவான்.

**அருந அமைவு:** இது புறச் சண்டைகளின் இடையிலும் அல்லது பல மாறுபட்ட குழப்பங்களால் சூழப்பட்டபோதிலும் மன அமைவுற்றிருத்தலாம்.

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்." (குறள் : சூஉரு)

ஒன்றின்மேல் ஒன்று வந்தாலும் உள்ளக் கொள்கையை விடாதவனை உற்ற துன்பங்கள் துன்பப்பட்டுப் போகும்.

MADURAI UNIVERSITY LIB

**நிலைக்கும் நற்பண்பு:** நற்பண்புடையரா யிருத்தல்; தீப் பண்பிற்கு இடமளிக்கா தொழித்தல்; இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்தல்.

> "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு." (குறள் : ௯௮௭)

தனக்குத் துன்பம் தருபவைகளைச் செய்தவர்களுக்கும் இனிமையானவைகளையே சால்புடையவன் செய்யானாயின் அவனது சால்பு வேறு என்ன பயனை யுடையதோ?

**இரக்கம்:** துன்பம் நேர்கையில் எல்லா உயிர்களிடத்தும், மக்களிடத்தும் ஆழ்ந்த இரக்கமுடையவரா யிருத்தல்; எளியோரையும், உதவியற்றோரையும் காப்பாற்றுதல்; ஒருவனின் பகைவர்களைக்கூட ஊறு படுத்தலினின்றும், பழிதூற்றலினின்றும் பாதுகாத்தல் முதலியன இரக்கத்தின்பாற்படும்.

> "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள் : ௩௦)

எல்லா உயிர்களின்மீதும் செம்மையான அருளை நோன்பாகக்கொண்டு நடத்தலினால், அந்தணர் என்போர் அறஞ் செய்வோராவர்

**மிகுந்த அன்பு:** வாழ்வன எல்லாவற்றோடும் அன்பாயிருத்தல்; மகிழ்பவரோடும், வெற்றி கண்டவரோடும் களிப்படைதல்; துயரமுறுபவரோடும், தோல்வியுற்றவரோடும் ஒத்துணர்தல் முதலியன மிக்க அன்பாம்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு." (குறள் : எஉ)

அன்பில்லாதார் எல்லாப் பொருள்களையும் தமக்கு உரிமையாக உடையவர்; அன்புடையவர் அவைகளேயன்றித் தமது உடலினையும் பிறர்க்கு உரிமையாக உடையவர்.

**நிறை அமைதி :** எல்லாக் காரியங்களிலும் அமைதியோடிருத்தல்; உலகமெல்லாம் அஃதாவது, உலகக் காரியங்கள் எல்லாவற்றிலும் அமைதியோடு இருத்தல். தெய்வீக ஒழுங்கமைப்பு முறையோடு ஒன்றும்நிலை இவ்வமைதி தான், நிறை அமைதியாம்.

"எல்லார்க்கும் நன்றும் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து." (குறள் : கஉரு)

அடங்குதல் எல்லார்க்கும் நன்றாகும்; அவர்களில் செல்வர்க்கே அவ் அடக்கம் பிறிதொரு செல்வமாய்த் தோன்றும் சிறப்புடையது.

இவையே தீய நடத்தையுடையவன், நன்னடத்தையுடையவன் ஆகிய இருவரையும் மேம்படுத்துகிற அறங்கள். மேலும் அறம் பயக்கும் பிற நன்மைகளும் இவற்றின்பாற்படும். இவ்வறங்கள் எண்ணிறந்த முயற்சியின் பயனாய் அடைய வேண்டிய கனிகள்; தீயவற்றை வென்று வெற்றி காணுபவனின் சிறந்த வெகுமதிகள்; தன்னைத் தானே வெற்றி கண்டவனுக்கெனச் செய்யப்பெற்ற பத்து மணியிழைத்த மகுடம். இத்தகைய மேம்

பட்ட அறங்களாலேயே ஓர் அறிஞனுடைய மனம் அணிசெய்யப்படுகிறது. இவற்றால், பாவம், பழி, தீங்கு தீமையிலிருந்து என்றென்றும் இவன் காப்பாற்றப்படுகிறான். இவ்வறங்களில் நிலைபெறுகிறான். அறங்களின் வழியொழுகித் தன்னல மனப்பாங்குடையோர் புரிந்துகொள்ள முடியாத தூய, தெளிந்த, ஆழ்ந்த, உயர்ந்த களிப்பில், அருளில், இன்பத்தில் வாழ்கின்றான்.

அறிஞன் பற்றைத் துறந்து அமைதிக்கு வந்துவிட்டான். கொந்தளிக்கும் கடலினருகில் இருப்பினும் பெரிய மலைகள் அலைகளால் அசைந்துவிடுவதில்லை. அதுபோல உயர்ந்த அறங்களைக் கைக்கொண்டு அதன்படியொழுகும் நிலையெய்திவிட்ட அறிஞனின் உளம், வாழ்க்கைக் கரையில் மோதுகிற அவாவெனும் அலைகளால் அசைபட்டுவிடாது. நற்பண்பு, அறிவு உடையோன் எப்பொழுதும் மகிழ்வோடும், அமைதியோடும் இருக்கின்றான். அவன் பேரின்பத்திலேயே வாழ்கின்றான்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்." (குறள் : கஉக)

அடக்கம் அழியாப் புகழிடமாகிய ஒளி உலகிற் செலுத்தும்; அடங்காமை நிறைந்த அறிவின்மையாகிய இருள் உலகில் செலுத்திவிடும்.

# எ. அமைதி - - -

> " நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
> மலையினும் மாணப் பெரிது." (குறள் : கஉச)

பற்றுள்ள இடத்தில் அமைதி இருப்பதில்லை. அமைதியுள்ள இடத்தில் பற்றிருப்பதில்லை. இதை யுணர வேண்டுமெனின் தூய செயல்கள் எனும் தெய்வ மொழி வல்லுனனாக இருக்க வேண்டும். பாசமும், அமைதியும் ஒருங்குறைவதில்லை என்ப தைத் தெரிந்துகொள்வதென்பது வளம் குன்றி யதையொழித்து வளம் கொழிப்பதைக் கைக் கொள்ளுதற்குத் தயாராய் இருப்பது என்று தான் பொருள்படும்.

மக்கள் அமைதி வேண்டி வணங்குகிறார்கள்; ஆனால், பற்றோடு பிணைந்துமிருக்கிறார்கள். சண்டை களைப் பெருக்குகிறார்கள்; அதே நேரத்தில் விண் ணுலக ஓய்வையும் விரும்புகிறார்கள். இது தான் அறியாமை; ஆன்மாவைப்பற்றிய ஆழ்ந்த பேதைமை; இவர்கள் தெய்வீக மொழியின் முத லெழுத்துக்கூடத் தெரியாதவர்கள்.

வெறுப்பும், அன்பும், சண்டையும் அமைதி யும் ஒருங்கே ஓருள்ளத்தில் உறைதலியலாது. இவ்விரண்டில் ஏதேனுமொன்றை விருந்தாளி யாக ஏற்று வரவேற்கும்பொழுது, மற்றொன்றை

வேண்டாத ஒரு புது ஆளாக வெளியே அனுப்பி யாக வேண்டும். மற்றொருவனை மதியாதொதுக்கு கிற ஒருவன், அவ்வண்ணம் தானும் பிறரால் மதியாதொதுக்கப்படுகிறான். தன்னோடொத்த ஒரு வனை எதிர்க்கிற ஒருவன் தானும் பிறரால் எதிர்க் கப்படுகிறான். எனவே, மக்கள் சிதறுண்டுவிட்டனர் என்பதைக் கண்டு அவன் வியப்படையவோ அன்றி துக்கப்படவோ கூடாது. அவன் சண்டையை வளர்த்துக்கொண்டிருக்கிறான் என்பதை உணர வேண்டும் அவன் தன் அமைதியின்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பிறரை வெற்றி காணுபவன் வீரன் தான்; ஆனால், தன்னைத் தான் வென்று வெற்றி காணு பவனே மிகுந்த மேன்மையுடையவன். மற்றொரு வனை வென்று வெற்றி காணுகிற ஒருவன் மறு தடவை தானே தோற்கடிக்கப்படலாம். ஆனால், தன்னைத்தானே வென்று வெற்றி காணுகிற ஒருவன் மறுபடியும் தோல்விக்குட்படமாட்டான்.

தன்னடக்கத்தின் மூலமே நிறைவான அமைதி யைப் பெற முடியும். புறப் பொருள்களோடு கொண்டுள்ள கொடுஞ் சண்டைகளைத் தவிர்த்துத் தன்னுள்ளத் தீப்பண்புகளுக்கெதிராகப் போரிட வேண்டும். உலகப் பகைவன் உள்ளத்து இருக்கி றானே தவிர புறத்திலில்லை என்பதை உணருகிற ஒருவன் அறிவுப் பாதையை அடைந்துவிடுகிறான். தன்பாலுள்ள அடக்கவொண்ணா கருத்துக்களே குழப் பத்தின், சண்டையின் வழிவகைகள் என்பதையும்,

தன் நெறியிலா இச்சைகளே தன்னமைதியையும், உலக அமைதியையும் கெடுக்கும் கருவிகள் என்பதையும் உணர்ந்து கொள்ளுகிறான்.

காமம், வெகுளி, வெறுப்பு, செருக்கு, தன்னலம், பேராசை ஆகியவற்றை ஒருவன் அடக்கி ஆண்டானெனின் உலகத்தையே அவன் வென்று விட்டதாகக் கருதலாம். அவன் அமைதியின் எதிரிகளை அழித்தவன்.

" காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்." (குறள் : ௩௬0)

விழைவு, வெகுளி, மயக்கம் என்னும் இவை மூன்றினது பெயரும் கெட்ட உடனே துன்பங்கள் போகும். அமைதி அவனுடனுறைகிறது.

அமைதி சண்டையிடுவதில்லை ; அமைதி கட்சியமைப்பதில்லை ; அமைதிக்கு உரத்த குரலில்லை ; எதிர்க்க முடியாத பேச்சின்மையே அமைதியின் வெற்றி.

ஏதேனுமொரு ஆற்றலைப் பெற்றிருப்பதால் மட்டும் ஒருவனைத் தன்னுள்ளத்தை அடக்கியாளுபவன் என்று கொள்ள முடியாது. அவன் முன்பிருந்ததினும் மாறுபட்டு ஒரு பகைவனாக மாறி விடலாம். ஆனால், அமைதியெனும் அருளால் வெற்றி காணுபவன், அதன் காரணமாக உள்ளத்தில், ஒரு மாறுபாடு உண்டுபண்ணுகிறான். முன்பு பகைவனாக இருந்தவன், தற்பொழுது நண்பனாகி விடுகிறான். பாசங்களுக்கும், அச்சங்களுக்கும்

வல்லந்தமும், சண்டையும் துணைக் கருவிகள். ஆனால் அன்பும், அமைதியும் மனத்துக்கண் மாசு துடைக்கும் கருவிகள்.

தூய உளமுள்ளோரும், அறிஞரும் அமைதியைப் பெறுகின்றனர். அது அவர்தம் செயல்களிலும் வெளிப்படத் தோன்றுகிறது. அவர்களின் வாழ்க்கை முறைகளிலேயே இப்பண்பைக் காணலாம். அமைதி பூசலைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்தது. வல்லந்தத்தால் செய்ய முடியாத செயல்களை இவ்வமைதியில் செவ்வையாகச் செய்து வெற்றி காணலாம். அமைதியின் சிறகுகள் நீதியைக் காக்கின்றன. இதனுடைய பாதுகாப்பின் கீழ் தீங்கற்றவர்களுக்குத் தீங்கிழைக்கப்படமாட்டாது. தன்னலப் போராட்ட வெம்மையிலிருந்து கவலையற்ற பாதுகாப்பளிக்கிறது. இது தோற்றவர்களின் புகலிடம்; துறந்தவரின் பாசறை; தூயவரின் கோயில்.

அமைதியின் பாலொழுகி, அதை நம் உரிமைச் சொத்தாக ஆக்கிவிடும் பொழுது, பாவம், கழிந்ததெண்ணிக் கலங்குதல், ஏமாற்றம், இணைவிழைச்சு, அவா, இச்சை, இன்னல் ஆகிய எல்லா மனக் குழப்பமும் கொந்தளிப்பும் பின்னொதுக்கப் பட்டுவிடுகிறது. அவை தன்னலம் என்னும் இருள்நிலைக்கு உரித்தான பொருட்கள். அவை அங்குத்தான் வதிய முடியும். அதினின்றும் அப்பாற் செல்ல அவைகளுக்கியலா. இவ்விருண்ட உலகத்

திற்கு எதிர்மாறாக, தெய்வீகப் பேரின்பமெனும் பகுதிகளில் என்றுமிறவா ஒளி சுடர்விட்டு மிளிர்கிறது. உயர்ந்த புண்ணிய வழியிலே நடக்கிற வழிப்போக்கன் குறிப்பிட்ட பொழுதிற்குள் இவ்விடம் வந்து சேர்ந்துவிடுவான்.

பாசத்தின் களங்களிலிருந்து, பலவித செருக்குகள் எனும் முள்நிறைந்த காடுகளின் ஊடு வந்து ஐயம், ஏக்கம் எனும் வறண்ட பாலைவனங்களைக் கடந்து வழிப்போக்கன் வழி நடக்கிறான். அவன் திரும்பிப் பார்ப்பதில்லை. தன்னுடைய வழிச் செலவில் எங்குந் தங்குவதில்லை. தன் உன்னதமான திட்டம் நோக்கி நடந்தவண்ணமாகவே இருக்கிறான். இறுதியில், பணிவும், கீழ்ப்படிதலும் தன் பண்புகளாகக்கொண்ட உறுதியுள்ள, சிறந்த வெற்றி வீரன் அமைதியெனும் எழில் நகரம் வந்துறுகிறான்.

> "காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
> அதனின் ஊங்கில்லை உயிர்க்கு." (குறள்: ௧௨௨)

ஒருவன் அடக்கத்தை உறுதிப் பொருளாகக் காக்கக் கடவன்; உயிர்கட்கு அதைக் காட்டிலும் மேம்பட்ட செல்வம் இல்லை.

MADURAI UNIVERSITY LIBRARY
JAN 1973
MADURAI-2.